[illegible]

V. 4. No. 29 18th Jue. 1931

D

JS
[illegible]2", N28KN
N31.4.24
188922

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

30 JUL 1931

Vol 4] 1931 ஹூ ஜூன் மீ 18உ [No. 24.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 461
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 463
3. நவராத்திரி — ஓர் நாடகம்
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 465
4. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-1—10)
K. இராமரத்நம் ஐயர் B.A. 468
5. கலைமகளந்தாதி
ஓ. வெங்கடசாமி ரெட்டியார் 471
6. யாப்பிலக்கணம் (தொடை-அளபெடை, இரட்டை, அந்தாதி, செந்தொடை) 472
7. கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 474
8. மானதசாத்திரம் (புலன்கள் - இடவுணர்வு)
T. P. மீனுக்ஷிசுந்தரம் M.A. B.L 478
9. வர்த்தமானம். 479

கலாநிலயம்

188922

உருவத் திரை

உலகப்போருள்கள் எல்லாவற்றினிடையேயும் ஒற்றுமை வேற்றுமை என்னும் இவையிரண்டும் உடனுடன் உறைகின்றன. முற்றிலும் ஒப்பனவுமில்லை, ஒவ்வாதனவுமில்லை. ஒற்றுமையின் தூய்மையிலேயே தோய்ந்த மனத்தவர் முத்தர்; வேற்றுமையின் பகையிலேயே பாய்ந்த மனத்தவர் மூர்க்கர்.

கலைஞர்தம் தன்மை இவ்விரண்டினும் வேறுயது. வேற்றுமை என்னுமவ் வுறுப்பையே அடியுடன் அகற்றி உள்ளும் புறமும் ஒற்றுமையே நிலையாகக் கைவந்த முத்தர்களும், ஒற்றுமையை மதித்துணரும் ஆற்றலிலராய் வேற்றுமையையே முன்வைத்து விவசரிக்கும் பாமரர்களும் செய்யலாற்று வொன்றைச் செய்துமுடிக்கும் பெற்றியோர் உண்மைக் கலையுணர்வுடைய புலவர். இவர், ஒற்றுமை வேற்றுமை என்னும் அவ்விரண்டு உறுப்புக்களையும் வேறுவேருய்க் காண்பாரேனும்,ஒருங்கேஉட்கொள்வர்; உட்கொண்டு அவ்வேற்றுமைக்கு இடையேயுள்ள ஒற்றுமையையும், ஒற்றுமைக்குஇடையேயுள்ள வேற்றுமையையும் காட்டுவார்; காட்டி,அவ்வொற்றுமைக்கும்வேற்றுமைக்கும் இடையேயும் மீண்டுமோர் பொதுத்தன்மையை நிலைநாட்டுவர்; நிலைநாட்டி, அப் பொதுத்தன்மையினுள் அவ்விரண்டும் நட்புடன் இணங்கி அமையும்படி சந்துசெய்து வைப்பார். இந்தச் செய்கையின் பெருமையைக் கலையுணர்வுடையோரால் கருதித் தெரிந்துகொள்ள இயலுமேயன்றிச் சொல்வன்மையுடையோராலும் சொல்லித் தெளிவித்தல் அருமை. ஆதலின், இதனை இயம்பிக் கரையேற இயலாதெனினும், குறிப்பினுற் சிறிது காட்டித்தர முயலலாமென நினைக்கின்றோம்.

பேசாது மௌனமாயிருக்குந் தோற்றமொன்று வெளிநின்று மாநுடமனதிற்குத் தன்னைப் புலப்படுத்திக் கொண்டவுடன் கலை ஆரம்பமாகின்றது. மாநுட மனதென்று இங்கு வற்புறுத்திச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனித்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனுல் ஆறறிவுடைய மனித இனத்தின் மனத்திற்கும் மற்றுள்ள உயிர்ப்பிராணிகளுக்கும் உள்ள சில பொதுச்செய்திகள் விலக்கப்படுகின்றன. மற்றவை வெளித்தோற்றங்களை உட்கொள்ள மாத்திரம் வல்லன. எல்லாப் பிராணிகளையும்போல் மனிதர்களும் வெளித்தோற்றங்களை உட்கொள்கின்றுராலும், பிறகு அந்தத் தோற்றத்தைப்பற்றிச் சிந்திக்கும் ஆற்றலுடையது மானுட மனமே யாதலின் அச்சிந்தனையினுல் விளையும் ஒரு சிறப்புப் பயனைக் கருத்திற்கொண்டே நாமிங்கு உரைப்பதைத் தேர்ந்துகொள்ளல் வேண்டும் என்பதை மறவாதிருக்கும் பொருட்டு, மாநுட மனதை வெளித்தோற்றம் ஒன்று தாக்கிய

வுடன் கலை ஆரம்பமாகின்றதெனக் கூறுவது இன்றியமை யாததாகின்றது.

இக்காலத்தில் ஊடாடும், இலாபநஷ்டக் கணக்கின்படி பார்க்குமிடத்துக்கலையினால் ஒரு பயனுளதென்று உரைத்தற்கில்லை. ஏனெனில், கலையானது, இலாபமொன்று மின்றியும், இலாபத்திற் கயலாகவும், இலாபத்திற் கெதிராகவேயும், அழகெனுந் தன் செங்கோலாட்சியைச் செலுத்திவைத்திருக்குந் தாத்தது. ஆதலின், கலையினால் வரும் ஊதியம் ஈதெனக் கணிப்பாரிலர். எனினும், கலையின் பயன் இன்பம் என, இக்கட்டுரையைத் தெளிவிக்கும்பொருட்டுக் கூறிவைப்போம். இனி, அவ்வின்பம் பயப்பதற்கு ஆதாரமாயிருப்பது எதுவெனச் சிறிது இங்கு ஆராய்தல்வேண்டும். இவ்வாராய்ச்சியினிடையே, "மாநுட மனதை வெளித்தோற்றமொன்று தாக்கியவுடன் கலை ஆரம்பமாகின்றது" என்று முன்னுரைத்த வாக்கியத்தின் உண்மைக்கருத்துப் புலப்படும். அது புலப்படுதலும், வேற்றுமை ஒற்றுமை என்னும் இரண்டு உறுப்புக்களையும் வேறோர் பொதுத்தன்மையில் பொருந்தும்படி செய்வார் புலவர் என்றதன் இரகசியம் வெளிப்பட்டதாகலாம்.

உலகப் பொருள்கள் நம் புலன்களுக்கு முதலில் தோன்றும்விதமொன்று; மீண்டுமப் பொருள் நம் மனதிற்குத் தன்னைத் தெரிவித்துக்கொள்ளுகின்ற விதம் வேறொன்று. இம்மாற்றுத் தோற்றம் பொருளின் செய்கையால் பாவிக்கப்படுகின்றதேனும் வாய்மையில் அதற்குக் காரணம் நம் மனத்தின் மாயமே. மாயம் என்ற சொல்லை வழங்கியதால் வஞ்சனையாதும் இதனில் இருப்பதாக எண்ணவேண்டா. மாநுடமனத்தின் சிறப்புரிமையாகிய சிந்தனை சக்தியே இங்கு அம்மாயத்தைச் செய்கின்றது. ஒரு பொருளை மறைவில் ஒளித்துவைத்தவன், எல்லாருடனும் தேடுவான் போல் தேடித் தானாக அகப்பட்டதைக் கண்டெடுத்ததாகச் சொல்வதை யொக்கும், தோன்றிய தோற்றத்தில் வேறோர் பொருள் தெரியக் கண்டேன் என்னுஞ் சொல். அப் பொருளைப்பற்றிய சிந்தனைகளின் கூட்டத்தால் குழந்தை வோர் வண்ணத்தை மனமானது கொண்டுபோய் அப்பொருளின்மீது பூசிவிட, அப்பொருள் இப்பொழுது தன்னை வேறோர் விதமாகத் தெரிவித்துக்கொள்ள இயன்றதாகின்றது. பரிதிக்கு முன் தோன்றிய பதுமமுகை, அப்பரிதியினாலேயே மலர்த்தப்பெற்றபின் அதற்கே தோடவிழ்ந்த தாமரையாய்த் தோன்றுவது போலாம் இது.

இனி, இதனையே வேறோர் விதத்தில், பொருளின் செய்கையாய்ப் புரிவதுபோலவும் புகலலாம். வடிவம் உருவம் என்னுமிவ்விரு சொற்களும் ஒரு பொருளுடையனபோற் றோன்றினும் அவை இரண்டிற்குமிடையே ஒரு வேற்றுமை உணாக்கிடக்கின்றது. உருவம் என்பது, ஒரு பொருளின் அகலம் நீளம் பருமன் இணைப்பு முதலியவைகளின் முழுத்தோற்றமாம்; மற்று, வடிவம் என்பது யாதெனில், அப்பொருள் தன்னைத் தோற்றுவித்துக்கொள்கின்ற தன்மை. வடிவமானது அப்பொருளினின்று பிரிந்து நம்மகத்தே பாய்ந்து வந்து சேரப் புறப்படும் பான்மைத்தென்னலாம்; அவ்வாறு பாய்ந்தோடாமல் வடிவத்தைத் தன்னுள் சிறை பற்றிவைத்திருக்கின்றது பொருளின் உருவம். ஒவ்வொரு பொருளிற்கும் வடிவம் ஒன்றுண்டு; உருவம் ஒன்றுண்டு. இவையிரண்டில், வடிவத்தைத் திரையிட்டு மறைப்பதுபோல் உருவம் அமைந்திருக்கின்றது. இத்திரைப்படலம் மிகவும் மெல்லியது—உண்மையே. ஆயினும் வடிவம் வெளிப்பட்டுக் கலங்கலும் கலைதலுமின்றித் தோன்ற, அத்திரை சிறிது விலகுதல்வேண்டும். இதனை நினைவிற்கொண்டே, எண்ணரிய அறிவும் ஆராய்ச்சியும் சொற்பொருள் தேர்ச்சியுமுடைய கம்பநாடர், மிதிலைநகரில் மணமகனாய் உலாப்போந்த இராமபிரானை வர்ணிக்கும்போது,

தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு மஃதே
வாள்கண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கண்ட சமயத் தன்னான்
உருவு கண்டாரை யொத்தார்,

என்ற அப் பலாறி பாசுரத்தைப் பாடியிருத்தல் வேண்டும் என நினைக்க நேர்கின்றது. சமயத்தால் தேடப்புகுவது உருவம் என்பதும், காதலால் நாடி அடைவது வடிவம் என்பதும் இச் செய்யுளின் அமைப்பினின்று எய்தியவராவோம். எனின், கடவுளைப்போல் அக்கடவுளின் படைப்புப் பொருள்களும் தம்பால் தலையன்புகொண்டவர் திறத்தில், தமது உருவத்தை மெல்லமெல்லப் பிரித்தகற்றி வடிவத்தைக் காட்டித் தருகின்றன. நெருங்கிப் பயில்பவர்மாட்டுத் தம் முகத்திரையை அகற்றி வடிவினைத் தெரியக்காட்டும் உத்தமசாதி அரசியர் போன்றவே இவ்வுலகப் பொருள்கள் அனைத்துமாம். இச்செய்தியை முன்போல் மாறி நோக்கினால் மாநுட மனத்தின் சிந்தனை யென்னும் செவ்விய கரங்களே பொருள்களுள் அளைந்து அவைதம் உருவமென்னும் திரையை நழுவ வீழ்த்தி வடிவினைத் தெரியவைக்கின்றது என உரைத்தலும் ஏற்றதாகும்.

இந்த வடிவக்காட்சி தலைப்படுவதுதான் கலையின்திறம். பொருளின் தோற்றத்தோடு மாநுட மனத்திற்கு இக்காட்சியும் தலைப்படவேண்டுமாதலால், கலையும் அப்பொழுதே ஆரம்பமாகின்றதென்று கூறினோம். இதுதான் இன்பத்தின் உற்பத்தி. தோன்றியபொருளில் இன்ப மில்லை. அப்பொருள் மறுபடியும் தன்னைத் தோற்றிக்கொள்கின்ற வகையிற்றான் இன்பமுளது. அம்மறுமுறைத் தோற்றத்தை ஏற்றுக் கொள்ளும் ஆற்றலுடையது கலையுணர்வொன்றே. இந்தத்தன்[illegible] இயற்கைப்பொருளனைத்தும், கட[illegible] கலைப்பொரு[illegible] பக்தியுடையோர்க் [illegible]தான்றல்வேண்டும்.

அப்பர்

அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

24. யோகம்

[446-வது பக்கத் தொடர்ச்சி]

9. ஹடயோகம்

ஹடயோகத்தில் முக்கியமானகிரியைகள் தேகசுத்தி, உணவு, முத்திரை யென்பனவே. இவைகளைச் சரிவர நடத்தும் சக்தி யேற்பட்டதும், அந்த யோகத்தைநடத்த அந்த யோகி முயல்வான். இதன் யோக பாகத்திற்குக் கிரியை * உருவுகொடுத்துத் தாயுமானவர் பாடுமோர் உருவகச் செய்யுளைக் காண்க:—

துள்ளு மறியா † மனது பரிகொடுத்தேன் கர்ம
துஷ்டதே வதைக ளில்லை
துரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்ப னன்பயி ஷேகநீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்தியம்
பிராணன் ஒங்குமதி தூபதீபம்
ஒருக்கால மன்றிது சதாகால பூசையா
யொப்புவித் தேன்கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்ல வுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே.

தாயுமானவர்-கருணாகரக்கடவுள். 8.

இக்கருத்துக் கொண்டே திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்திலும்,

காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை யீச னார்க்குப் போற்றவி காட்டி னோமே.

தனித்திருநேரிசை 4.

என்னும் பாடலில் இத்தன்மையான பூசை உருவகத்திற் காட்டப்பட்டது. யோகத்தினுட் சிறந்த யோக பாகமாகும் அதனைச் செய்வது எவ்வாறென்பது ‡ விளங்கவில்லை.

ஒட்டி நின்ற வுடலுறு தீவினை
கட்டி நின்ற கழுந்தவை போயறத்
தோட்டுநின்றும் அச்சோற்றுத் துறையர்க்கே
பட்டி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே!

பொங்கி நின்றெழுந் தகட னஞ்சினைப்
பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்
தோங்கி நீ பென்றுஞ் சோற்றுத் துறைபர்க்குத்
தங்கி நீ பணி செய்மட நெஞ்சமே!

திருச்சோற்றுத்துறை - திருக்குறுந்தொகை 3 & 6.

"தொட்டு நிற்பதும்", "தொங்கித் தங்குவதும்" நமக்கு பாதும் பொருள்விளங்கவில்லை அந்நிலையின் இலக்கணம் யாதென்பதை வேறு நூல்களின்வழி ஆராய்வோம்:—

குண்டலிசக்தியென்பது தேகத்தை நரம்புக்கட்டுக்களால் ஆள்கிறதென்று முன்னரே கண்டோம். இந்நரம்புகள் பலவற்றை நாடிகளென்றும் ஆன்றோர் கூறுவர். முதுகினிடைபோடும் மூளை போன்ற நரம்பானது மற்றொருவகை நரம்பு இராச்சியத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும். இதனை ஆங்கிலத்தில் (Sympathetic Nervous System) சிம்பதெடிக் நரம்பின் ஆட்சி யென்பர். அதாவது முழுமுதல் நரம்புக் கூட்டத்தை விரும்பிய நாடித்தத்துவமாம். இதை "அந்தர வேஷ்டன்" என்று வடநூலார் கூறுவர்.

ஆந்தர்வேட் டனிகையென்றோர் தனிநாடி
நாடிகள் நூறனுங்கி நிற்கும்
வாய்ந்தவிசை வீணையுடல் வட்டம்போல்
நீர்சுழிபோல் வட்ட மேயாம்
ஏய்ந்துளதா னங்களெலாம் எய்தலுறு
மபனிடத்து மெறும்பின் பாலும்
போந்துளபல் லுயிரிடத்தும் உடல்தோறும்
தோன்றியே பொருந்தி நிற்கும்.
சீதவருத் தத்திறற் றயில் பாம்பி
னுடல்போற் சிக்கென வளைத்தெப்
போதுமசை வருங்காற்று னிலைநிற்குங் கதலிமென்
பூப்போ லுள்ளும்
மேதகமெல் லியதாகு மதனூடே யொருசக்தி
விசித்த மாகி
ஏதமறு பரமமாய்ச் சத்திகட்கெல் லாம்வெற்றி
யெய்த நல்கும்.

ஞானவாசிஷ்டம்.

மேற்கண்ட எல்லாச் சக்திகளுக்கும் வெற்றிதரும் பெருஞ் சக்தியாகிய குண்டலி ஆந்தரவேட்டனிகையிடத்துப் பிறங்குவதால் இருவகைப்பட்ட நரம்பாட்சிகளும் (Regular Nervous System and Sympathetic Nervous System) இதற்கு உரித்தாகும். இந்தநிலையில் குண்டலி சக்தியானது நிற்பதால் பற்பல ஆட்சிகள் பொருந்தி நிற்கும். சில வேளை யறிவாகவும் நிற்கும். சிற்சிலசமயம் மனமாக

* தீண்டற் கரிய திருவடி யொன்றினால்
மீண்டற் றும்மித்தீ தாரரக் கன்றனை
வேண்டிக் கொண்டேன் திருவாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வனா னென்றலுந் தோன்றுமே.

திருவாய்மூர்-திருக்குறுந்தொகை 10.

† மறி - என்பது ஆட்டுக்கடா - (செம்மறியாடு என்று வழங்கும் சொல்லாலறிக) - துள்ளும் அறியாமனது என்று சில உரையாசிரியர்கள் பிரித்து எழுதியிருப்பதால், அவ்வகை பிரித்தல் சிறப்பிலதென வுணர்த்த இக்குறிப்பு இங்கு எழுதலாயிற்று.

‡ உண்ணிலா வாவியா யோங்குதன் றன்மையை
விண்ணிலா ரறிகிலா வேதவே தாந்தனூர்
எண்ணிலா ரெழின்மணிக் கனகமா ளிகையிளந்
தெண்ணிலா விரிதருந் தென்குடித் திட்டையே.

சம்பந்தர்.

வும் நிற்கும். சிற்சிலசமயம் கலைகளாயும் நிகழும்.* மற்றும் அந்தக்கரணங்களில் யான் என்னும் அகங்கார வடிவாயும் நிற்கும், பிறகு ஜீவனாகவும் நிற்கும். இவ்வாறு எண்வகை இயக்கத்தால் † இக்குண்டலி சக்திக்குப் புரியட்டகம் என்னும் பெயரும் உண்டு. இச்சக்தியின் சம்பந்தத்தை யெண்ணியோ, வேறு காரணத்தாலேயோ சிவபெருமானுக்கு

எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்னகெ டிலவீ
ரட்ட ளாடி சேரும வருக்கே. (1)

நீள மாநினைந் தெண்மல ரிட்டவர்
கோள வல்வினை யுந்துறை விப்பால்
வாள மாவிழி யுங்கெடி லக்கரை
வேளி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. (2)

கள்ளி ளுண்மல ரோரிரு நான்குகொண்
டுள்கு வாரவர் வல்வினை போட்டுவார்
தெள்ளு நீர்வயல் பாய்கெடி லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ ரட்டரே (3)

பூங்கோத் தாயின மூன்றொடோ ரைந்திட
ஓங்கி நின்றவர் வல்வினை போட்டுவார்
வீங்கு தண்புனல் பாய்கெடி லக்கரை
வேங்கைத் தோலுடை யாடைவீ ரட்டரே. (4)

தேனைப் போதுகள் மூன்றொடோ ரைந்துடன்
தானப் போதிடு வார்வினை தீர்ப்பரால்
மீனத் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேன லானை யுரித்தவீ ரட்டரே (5)

ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட வகற்றுவார்
பாழித் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேழத் தின்னுரி போர்த்தவீ ரட்டரே. (6)

உரைசெய் நூல்வழி யொண்ம ரிட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி லக்கரை
விரைகள் சூழ்ந்தழ காயவீ ரட்டரே (7)

ஒலி வண்டறை யொண்மல ரெட்டினாற்
காலை யேத்த வினையைக் கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி லக்கரை
வேலி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. (8)

தாரித் துள்ளித் தடமல ரெட்டினாற்
பாரித் தேத்தவல் லார்வினை பாற்றுவார்
மூரித் தெண்டிரை பாய்கெடி லக்கரை
வேரிச் செஞ்சடை வேய்ந்தவீ ரட்டரே. (9)

அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்
டட்ட மூர்த்திய னாதிதன் பாலணைந்
தட்டு மாறு செய்கிற்ப வதிகைவீ
ரட்ட னாடி சேரு மவர்களே. (10)

திருவதிகை வீரட்டம் - திருக்குறுந்தொகை.

எனத் திருநாவுக்கரசு பாடுவது காண்க. இப்பதிகம் முற்றும் கூறியதுகூறல்போல் காணப்படினும் ஒவ்வொரு செய்யுளின் லட்சியார்த்தம் வெவ்வேறென்பதற்குச் சந்தேகமில்லை. நம் திருநாவுக்கரசுநாயனார் மிகவும் கடினமான அரிய விஷயங்களை உணர்த்தும்போது இரட்டுறமொழிந்து நல்ல தமிழில் எளிய நடையில் சாதாரணவிஷயம் உணர்த்துவதுபோல் ‡ பாடுவதும், அதனால் அதைப் படிப்போர் உண்மை கண்டறியாது அலட்சியமா யவற்றைக் கடந்து செல்வதும் அப்பர் கவிநடையின் சிறப்பிலக்கண மென்னலாம். இங்கும் அவ்வாறே காணப்படுகின்றது. எட்டுப் புஷ்பமெடுத்துச் சிவபெருமானை அர்ச்சிப்பதைப்பத்து தடவை ஏன் பகரவேண்டுமென்பதற்குச் சாமான்ய ஆராய்ச்சி போதாது. போகத்திலே ஞானப்பியாசங்களை உணர்த்தும் போதெல்லாம் அப்பர் எழுதும் நடை வெளிப்படையாயிராமல் ஏதோ வேறொன்றை மொழிவதுபோல் கூறுவார். இத்தகைய செய்யுள் நடைகள் வருங்காலத்தில் தேவாரங்கற்போர், தாங்கள் அப்பர்கருத்தை அறிந்துவிட்டதாக எண்ணாமல் இதையேன் இவ்வாறு வெற்றெனமொழிந்தார், இவர் கல்வியிற் பெரும்புலியாயிற்றே, என்று அஞ்சி ஆராய்ச்சியில் ஆழவேண்டியது கடமையாம்.

மற்றொன்றை விவரிப்பதுவிட்டு இனி ஹடயோகத்தின் யோகபாகத்தைக் கண்டுணரத்தொடர்வதேநலம். குண்டலி சக்தியைக் குறித்துச் சில விஷயங்கள் கண்டோமன்றோ. அது நமது நரம்புக்கூடு முற்றும் ஆட்சி செய்கின்றதென்றும், ஆந்திரவேஷ்ட சம்பந்தத்தால் நினையாத கருமங்கள் முன்வந்து நிற்கச்செய்யும் செயலுமுண்டென்றும் கண்டோம். இக்குண்டலி சக்தியை வணங்கித் தனதுதேகத்தை அதனிடம் ஒப்புவித்து அதைப் பாதுகாக்கச் செய்வது யோகியின் முதல் கடமையாகும். அவ்வாறு ஹடயோகத்தில் ஒப்புவிப்பது சாதாரணகாரியமன்று இராஜயோகத்தில் பிராணாயாமமென்னும் மூச்சின் ஆட்சியைப் பற்றி மொழிந்தோம். மூச்சை ஒருவகை யளவின்படி உள்ளே இழுத்தலும், அதை அந்நேரமே உள்ளே நிறுத்தலும் பிறகு அந்தக் காலஅளவிலே உள்ளே இழுதத முறையில் வெளியே விடுவதும், பழகப்பழக மனம்ஒருங்குபட்டுநிற்குமென்பதுங்கண்டோம். ஹடயோகத்தில் பிராணாயமும் உண்டு. ஆனால் அதன்தொழில் வேறாகும். கோப மிகுந்ததொரு பெண்பாம்புபோல்மூச்சுவிட்டு முநம்மேலாகஎப்பொழுதும் அசைவுக்குக் காரணமாகிய மனப்பெட்டியைச்சேர்ந்த நாடிகள் யாவற்றையும் கட்டுப்படுத்தும் குண்டலிசக்தி* ஜீவசக்தி யென்றும், அதுமிகவும் நல்லதென்றுமுணர்ந்தோம். அது பிராணன் அபானன் உருவமாய்க் கீழும் மேலும் இயக்கம்பெற்று உயிரை ஆக்கவும் அழிக்கவும் வல்லதென்பர். இதன் ஆட்சி தவிறிவிடுமானால் உண்ணும் உணவும் விஷமாய், காற்றும் சீரணமாய் நாடிகள் நிலைகுலைந்து அவற்றின் சலனத்தால் மரணமுண்டாகும். இம்மரணத்தைத் தடுப்பதற்கே ஹடயோகத்தில் சில பிராணயாமத் தொழில்கள் உள. அவை குண்டலி சக்தியுடன் † சம்பந்தப்பட்டுக் காய சித்தி பெறுதல் ‡ அடியில் வருமாறு:—

புகல்வுறுகுண் டலிதன்னைப் பூரகத்தின் பரிசயத்தாற்
பூர்ண மாக்கித்
திகழ்வுறநின் றுலன்று வடமேரு நிகரான
திண்மை யுண்டாம் ;
மிகவுடலம் தடிப் பெய்தும் ; பூரகத்தாற்
பிராணனிறை வுற்ற மெய்யைப்
பகாறிவு மேனோங்கி பொருக்காலே விண்செல்லப்
படர்விக்கும்.
பாம்புபோல் விரைந்து, தடிபோனிமிர்ந்து குண்டலினி
படர்ந்து மேற்போம் ; [கவர்ந்து
தாம்புபோ லுடல்பிணித்த நரம்பெல்லாம் தான்
சரீர மெல்லாம்
தேம்புறு வகைமேலே யெழுப்புவிக்கும்; காற்றினாற்
செறிந்த பைதான்
தூம்புசூழ் நீரிடையே யமுத்துகினு மேற்கிளப்பு
தொடர்ச்சி போல.

ஞானவாசிஷ்டம்.

மேற்கண்ட செய்யுட்களில் குண்டலிசக்தி பிராணயாமத்தில் பூரகத்தால் தேகத்தைப் பருக்கச்செய்வதும், ஆகாயகமனஞ் செய்வதற்குப் பயன்படுமென்றும், காற்று உள்ளே முறைப்படி செலுத்திக் கொள்வதாய்ப் பெலூன் (Balloon) என்னும் ஆகாயப் புகைக் கூண்டுபோல் தேகம் காற்றுப் பையாய் மேலே கிளம்பு மென்றும் *

---

* கருவினு லன்றியே கருவேலா யாயவன்
உருவினு லன்றியே யுருவுசெய் தானிடம்
பருவநாள் விழவொடு பாடலோ டாடலும்
திருவினன் மிகுபுகழ் தென்குடித் திட்டையே.
சம்பந்தர்.

† சிந்தனையாற் கலையாகும்,
சேதனத்தாற் சித்தாகும், சீவனத்தாற்
சந்தமுறு ஜீவனும், மனனத்தால்
மனமாகும், சங்கற் பத்தால்
அந்தமில்சங் கற்பமாம், போதத்தாற்
புந்தியாம், அகங்கா ரத்தால்
வந்தவகங் காலமாம், இனையபுரி
யட்டகப்பேர் மருவுந்தானே.
ஞானவாசிஷ்டம்.

‡ பாத்தானை யிப்பக்கம் பலவா னானைப்
பசுபதியைப் பத்தர்க்கு முத்தி காட்டும்
வரத்தானை வணங்குவார் மனத்து ளானை
மாருதமா லெரிமூன்று வாயம் பேர்க்குஞ்
சரத்தானைச் சரத்தையுந்தன் தாள்கீழ் வைத்த
தபோதனனைச் சடா மகுடந் தணிந்த பைங்கட்
சிரத்தானைத்திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.
திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 9.

* வெங்கண் வாரை வாட்டி, வெநட்டுவர்
அங்க ணாடி யார்க்கருள் நல்குவர்
செவகண் மாலயன் தேடற் கரியவர்
பைங்க ணேற்றினர் பாலைத் துறையரே
திருப்பாலைத் துறை - திருக்குறுந்தொகை 10.

† உற்றுலகு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர் வைத்தார், உயிர்செல்லுங் கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காணு
மறைவைத்தார்; குறைமதியம் வளர வைத்தார்
செற்றமலி யார்வமொடு காம லோபஞ்
சிறவாத நெறிவைத்தார், துயவு வைத்தார்
நற்றவர் சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.
திருநல்லூர் திருத்தாண்டகம் 6.

‡ பிறவி பிணி மூப்பிறெநு நீங்கி யிமையோருலகு பேணலுறுவர், துறவியெனு முள்ள முடையார்கள் கொடிவீதி யழகாய தொருசீர், இறைவனுறை பட்டிசரமேத்தி யெழுவார்கள் வினையேதுமிலவாய், நறவ விரையாலு மொழியாலும் வழிபாடுமற வாதவவரே. சம்பந்தர்.

* நான் சிறுவனாயிருந்தபோது "பறக்கிற அம்மாள்" என்கிற ஒரு ஸ்திரீயைப் பற்றி ஆச்சரியமாய்ச் சென்னையில் பேசுவர். பிறகு கல்லூரி மாணவனாயிருந்த காலையில் திருவொற்றியூரில் அந்த அம்மையாரை யான் நேரில் கண்டு இதன் விவரம் விசாரித்ததில் அந்த அம்மையார் யௌவனத்தில் தனது நரம்புகளானவை ஒருவித ஆட்டம் திடீரெனக் கொடுக்குமென்றும், உடனே தான் கிளப்பப்பட்டு, மூன்று நான்கு வீதிகளுக்கு அப்புறத்தில் தூக்கிக் கொண்டு போகும்போது, மறுபடியும் அந்நரம்புகள் தளர்ச்சியுண்டாகித் தான் மெல்ல இரக்கிவைக்கப்படுவாரெனவும், வயது தளர்ந்த பின், இச்சக்தி, அல்லது வியாதி, தன்னை விட்டு நீங்கியது என்றும் தான் சுயேச்சையாய்ப் பறந்ததில்லை யென்றும் கூறினார். அவ்வம்மையார் காலஞ்சென்று சுமார் 20 வருடங்களாகிறது]

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[450-வது பக்கத் தொடர்ச்சி]

துரை:— அடே, என்ன கேலி! பழுப்பிலைக் கொத்தையா பூச்சி என்று பயமுறுத்தினாய்! (சிரிக்கிறான்)

உரு:—பூச்சியே! பறந்தது—விடுகிறேன் பார் என் பிடியை!—இதோ...பார்!

துரை:—ஆம், பறக்கிறது—இதுவும் படைப்பு மாயமே! சிவமயம்! சிவமயம்!

உரு:—நானும் சிவமாயமா? (சிரிக்கிறான்)

துரை:—பிடி அதைத் திரும்பவும்! அதோ தூணில்....

உரு:—ஏன்? (பூச்சியை மீண்டும் விரலால் பிடித்து) எனக்கொரு யோசனை தோன்றிற்று, உனக்கும் தோன்றியதோ ? (சிரிக்கிறான்)

துரை:—என்ன யோசனை உனக்குப் பட்டது?

உரு:—நான் மோட்டா ரோட்டி—யந்திர நுட்பங்களை அறிவோன். பழுப்பிலைகள் இந்த...எத்தனை?

துரை:—ஒன்று, இரண்டு, நாலு, ஆறு, ஏழு, எட்டு.

உரு:—இந்த எட்டு இலைகளைக் கம்பிகளில் கோத்துக் கொக்குப்போல்...

துரை:—இது கொக்குப்போ லில்லையே...வாத்துப் போல்....

உரு:—வாத்தோ இது?

துரை:—வான்கோழி போல்....

உரு:—வான்கோழி போலா? தீக் கோழிபோல்!

துரை :—மெள்ளப்பேசு ... காலடி அரவம் கேட்கின்றது.

உரு:—ஒருவருமில்லை....நான் சொல்வதைக் கேள்!

துரை :—அதோ பார் – அந்தத் துலுக்கன்! தீக் கோழிபோல்...

[தியாகு வலப்புறத்திலிருந்து வருகிறான்]

தியா:—தீக்கோழிபோல் தலையை மணலில் புதைத்துக்கொண்டால், உங்கள் வேலை பிறருக்குத் தெரியாமற் போய்விடுமா ?

உரு :—(கைக்குட்டையைப் பூச்சிமேல் எறிந்து மூடிக்கொள்கிறான்.) என்ன தெரிந்தது உனக்கு ?

துரை :—யாரப்பா, புதுச் சீடன்நீ, எழுந்திரு, நமஸ்காரம் செய்தது போதும், வா இங்கு ! உட்கார் !

உரு :—தங்களது புகழ் நாடெங்கும் பரவி இருக்கிறது. துலுக்கரும் அடியில் விழுந்து பணிகிறார்கள்.

தியா :—நீ யார் ? மோட்டாரோட்டியல்லவோ ? என்ன! நாற்காலியில் உட்கார்ந்தாய்! யஜமானனில்லை என்ற துணிவோ ?

உரு :—ஆம் ! நீ என்ன கேட்பது, எனக்கு உரிமையில்லையோ? மோட்டாரில்,கவர்னர்தான் போகட்டுமே- உன் காந்திதான் போகட்டுமே- முன்னாலே உட்கார்ந்திருப்பவன் மோட்டா ரோட்டியே ! நான் பிழை என்ன செய்துவிட்டேன் ? நீ எஜமானே எனக்கு ?

துரை :—சண்டையேன், வாதமேன்? உயர்ந்தோன் யார், தாழ்ந்தோன் யார் ? எல்லாம் சிவம் சிவசிவ சிவசிவ.

[மோட்டார் லாயப் பாதையின் வழியாய்ச் சுபத்திரை வருகிறாள்.]

சுப :—பாட்டி, குஞ்சுவைக் காணோமே !....

உரு :—பாட்டியையும் காணோம் (சிரிக்கிறான்)

சுப :—(வெட்கி) இங்கில்லையோ?-(தியாகுவை நோக்கி) உள்ளே போனாளா ? (உள்செல்லப் புறப்படுகையில்)

உரு :—இவனுக் கென்ன தெரியும்? (சிரிக்கிறான்)

தியா :—கொஞ்சம் மரியாதையாய்ப் பேசு!

உரு :—சாமியாரிங்கிருக்கிறார்— நீயும் மரியாதையாய் நட !

[இடப்புறத்திலிருந்து காமு வருகிறாள்]

காமா :—சுபத்திரையா அங்கே ?–எங்கே குஞ்சு?

சுப :—பங்களா முழுதும் தேடிப்பார்த்தேன் — காணோம்—மாயாண்டியும் தேடுகிறான்....எல்லோரும் போய்த் தேடினால்—ஒரு வேளை........

தியா :—தேடுவானேன்--இதோ, சாமியார் நிஷ்டையில் இருக்கிறார்–அவரைக்கேட்போம்-எங்கே குஞ்சு? சாமியாரே சொல்லியருளுங்கள் !

துரை :—(கோபமாய் விழித்து விழி சுழற்றி) ஊம்!

சுப :—அப்பா ! பயமே !

உரு :—எங்கே !—இதோ மன்மதன் நிற்கிறேன் !

[சுபத்திரையைப் பார்க்கிறான்]

சுப :-(சிரித்துக்கொண்டு தலையை மறைத்து) குழந்தை எங்குப் போயிருப்பாள் பாட்டி ? மீண்டும் தேடுகிறேன் போய்.

காமா :—வேண்டாம் — பின்புறம் சென்று ஸ்டவ் எறிகிறதா என்று பார்த்துக் காப்பியைப் போடேன், சீக்கிரம் — வெகுநேரமாய்க் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சுப :—சரி ஆகட்டும்—இதோ போகிறேன் !

காமா :—போ சீக்கிரம், தானே குஞ்சு வந்துவிடுவாள், பார் !

[மாயாண்டி இடப்புறத்திலிருந்துவருகிறான்]

மாயா :—காணோமே அவளை!

தியா :—இனி, சாமியாரே தஞ்சம்!

உரு :—பாருங்கள்! எல்லாரும் பாருங்கள்! வாருங்கள்அருகே ! சாமியாரின் சத்தியைக் உங்களுக்குக் காட்டுகிறேன் !

காமா :—என்ன என்ன ? (அருகு செல்ல, சுபத்திரையும் உடன் நெருங்குகிறாள்)

மாயா :—விபூதி விபூதி ! நமஸ்காரம் பண்ணினேன் ! (தரையில் விழுகிறான்) சாமியாரே விபூதி !

[ராஜீயா வலப்புறத்திலிருந்து சைகிளில் வேகமாய் வருகிறாள்]

சுப :—எழுந்திரு, எழுந்திரு! உன்மேல் ஏறிவிடும்.

மாயா :—ஐயையோ செத்தேன் சாமியாரே, உயிரைக் காப்பாற்றுங்கள் (எழுகிறான் - தூணைக்கட்டிக் கொள்கிறான்)

ராஜீ :—வழிவிடு, என்ன வேடிக்கை இங்கே ! (துரைசிங்க னருகுற்று) உன்மேல் ஏற்றிவிடுவேனென்று தானே எண்ணினாய் ? (சிரிக்கிறாள்).

உரு :—பார்த்தீர்களா ? நமது சாமியாரின் சக்தியைப் பழிக்கும் பாதகன் இப்பட்டாணியே பார்க்கட்டும். பாருங்கள் இந்த அற்புதக் காட்சியை - விலகுங்கள் (சுபத்திரையின் கையைத் தொட்டுத் தள்ளிவிடுகிறான்)

தியா:—கொழுப்பு! இருக்கட்டும் என்ன இங்கே ?

ராஜீ:—(சைகில்மே லிருந்த வண்ணமே பூச்சியைக் கசக்கக் கைநீட்ட) மருந்துக்கா?

உரு:—தொடாதே, விஷப்பூச்சி!

சுப:—பூச்சியா ?

காமா:—இலையல்லவோ இது ?

மாயா:—நான் பார்க்கிறேன், விலகுங்கள்! இந்த விஷத்துக்கு உங்கள் விபூதியைக்கொஞ்சந் தூவினால் போதுமா? சாமியாரே—விபூதி!

துரை:—இரு! இரு! (கையமர்த்துகிறான்)

உரு:—நீங்கள் சொல்வதெல்லாம் மெய்யே—இலைதான். இப்போ—நீங்கள் உள்ளே சென்றீர்களே—சாமியாருக்கு ஏனோ—திடுக்கென ஏதோ தோன்றியது "உருமு" என்றார். ஏன்,என்று அடியில் தாழ்ந்தேன். அந்தப் பூஞ்செடியின் சில பழுப்பிலைகளைக் கொண்டுவா என்றார்...கொண்டுவந்தேன்!

மாயா:—இந்தச் செடியிலிருந்தா?

உரு:—ஆமாண்டா கவண்டா—பேசாதிரு - சாமியாரிடம் பேசலாமோடா நீ!

மாயா:—சாமியார் உத்தரவு! (கும்பிடுகிறான்) விபூதி சாமி!

துரை:—இந்தா.

மாயா:—(வாங்கிக்கொண்டு) இந்தாம்மா—உங்களுக்கும்.

காமா:—(வாங்கிக்கொண்டு) நான் அவரிடம் வாங்கிக்கொள்கிறேன்; பேசாமலிரு...அப்புறம்...

உரு:—கையில் வாங்கிக் கிழித்தார்; சிறிது சிறிதாய் எட்டுக் கிழிசல்களைப் பொறுக்கி—அப்படியும் இப்படியுமாய் வைத்து; பூ—என்று ஊதினார்—இலைகள் பறந்தன !.... தனித்தனியாகவா ? அல்ல ! பூச்சி ஒன்று!! இவர் படைத்தது !!! இவர் மூச்சால் தானே படைத்தது!! கேட்கிறதா நான் சொல்லுகிறது! பழுப்பிலைகளுக்கு உயிர்கொடுத்துப் பூச்சியாக்கிய இவரை....நீ..........

தியா:—இதுமாதிரிப் பூச்சிகள் உண்டென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்—நீ முழுப்பொய்யன்.

துரை :—ஆம்—பொய்யே இவ்வுலகு! சீடா, முழுதும் பொய்தான்-இவ் வுலகு !....படைப்பும், துடைப்பும் !

மாயா :—(விபூதியை நெற்றியில் பூசிக்கொண்டே) உங்திறமையே திறமை!—இன்னும் தாருங்கள் விபூதி— உடல்முழுதும் பூசிப் புண்ணியமடைகிறேன் !

தியா :—வெட்டுக்கிளி பார்த்ததில்லையோ...........

சுப :—ஆம், பச்சைப் பசேலென—சரக்கொன்றை இலை இரண்டு கட்டிக்கொண்டதுபோல்........

ராஜீ :—பச்சை நூல் தொங்கிக் கொண்டு....

உரு :—(மேலும் கீழுமாய்த் துரைசிங்கன் தன்தலையை 'ஆம்,' என்று ஆட்ட) சாமியாருக்குத் தெரியாமலா ? தலையை அசைக்கிறார் பார்—பச்சை இலையில் சற்று உயிர்ச்சத்து ஊறியிருக்கும்! ஆனால் பழுப்பிலைகளால் செய்து தன் யோகசக்தியைக் காட்டி மானிட இனத்தை உய்வித்தருள எண்ணி இப்படி வேண்டுமென்றே இதனைச் செய்தார் இன்று ?

காமா :—கடைத்தேறினோம் இன்றைக்கு! மகாத்மா இவர் ! குஞ்சுவைக் காணோமே !

தியா :—மாலைவேளை— விளையாடச் சென்றாளோ என்னவோ ! வாசற்பக்கம் போனாள், பார்த்தேன் ! அந்த வழியாய் ! (வெளிப்பக்கத்தைக் காட்டுகிறான்).

காமா :—பங்களாவுக்கு வெளியிலா ? ஐயையோ! உடனே பிடித்திழுத்துக்கொண்டு வரவேண்டாமோ.

தியா :—மனம்போல் திரிந்து விளையாடட்டுமே, களித்தாடட்டுமே !

காமா :—மோட்டார் ஏதாவது ஏறிக் கொல்லவா!

உரு:—ஆம்-மோட்டாரின் குற்றந்தான், மோட்டாரோட்டிகள் என்ன செய்வார் ?

காமா :—பங்களாவைவிட்டு வெளியே என்றுமே போகமாட்டாளே குஞ்சு!

தியா :—ஏன், இது சிறையா ?

காமா:-எந்தப்பக்கம்போனாளோ, போய்க் கொண்டு வா அவளைச் சீக்கிரம் ! நீயே போ !

தியா :—ஏன், நானா? உங்கள் வேலையாள்கள் இருவரும் என்ன செய்கிறார்கள் ? எனக்கு இங்குக் காரியமிருக்கிறது (சுபத்திரையை நோக்கி).

சுப :—மறந்தேனே! போகட்டுமா காப்பிக்கு ! (சிரிப்புடன் உள்செல்கையில்).

உரு :—உனக்கென்ன காரியமிங்கே! போவெளியே!

காமா :—விடாதே—பிடி அவனை ! சாமியாரே சங்கதியிது—நான் தங்களை வருவித்து, ரகசியமோ மந்திரமோ ஜபித்துக் குழந்தையை நோக்காது போகும்படி இவ்வளவு தடுக்கிறானிவன் - இவன்தான் அவளை எங்கேயோ ஒளித்துவைத்திருக்கிறான்....இத்தனை நேரம் குஞ்சு என் கண்விட்டு ஒருநாளும் போனது இல்லையே ! இன்றைக்கு மறைவானேன் !

தியா :—(சிரித்துக் கொண்டு) இந்த மூட்டைகளையும் பெட்டிகளையுங் கண்டு அம்மா வந்துவிட்டாளே என் அவளைக்காணோம் என்று ஊரெங்கும் தேடப் புறப்பட்டிருப்பாள்.

காமா :— சிரித்துக்கொண்டு சொல்வதிலிருந்தே தெரியவில்லையா இவன் பொய்யும் புரட்டும்?........ வசியம் தெரிந்த உங்களை இன்று அழைத்து மனதை மாற்றிக் குழந்தையை நோக்க நான் பிரயத்தனம் செய்யும்போது இவன் புகுந்து......சாமியாரே—உங்கள் சக்தியை முதலில் இவனிடம் கையாண்டு இவன் கொட்டத்தை அடக்கவேண்டும்

உரு :—சாமியார் தலையைச் சம்மதமாய் ஆட்டிவிட்டார்!(எழுந்து பாய்ந்து, தியாகுவின் மணிக்கட்டுகளைப் பிடித்துக்கொண்டு) எங்கே அவள், சொல்லு !

ராஜீ :—(தியாகுவிடம்) விடாதே நீ—கீழே புரட்டித் தள்ளு அவனை!—

மாயா :—அவனையா ? உருமப்பிள்ளையையா? எருமையும் பன்றியும் சண்டைபோட்டால்...

சுப :—ஐயையோ—எதற்காகச் சண்டை ? பாட்டி விலக்குங்கள் ! (முன் ஓடிவருகிறாள்) சாமியாரே !....

காமா :—அவளை இவன் ஒளித்து வைத்திருக்கிறானே— தரங்கம்பாடிக்கோ குரங்கங்கோடிக்கோ குழந்தையை அடித்துப் போகவா! மாயாண்டி-போடா ஆபீஸறையில் நன்றாய்த் தேடுநீ...(கூவுகிறாள்) குஞ்சு! குஞ்சு!

மாயா:—பார்க்கிறேன் (வலப்புற அறையில் மறைகிறான்)

உரு:—எங்கேடா அவள்.

தியா:—நிஜத்தைச் சொல்லிவிடட்டுமா? கையை விடுகிறாயா? நான் அலிகார்க் கல்லூரியில் படித்தவன். தேசீயக்கல்லூரி - குஸ்திபோடத் தெரியும், சிலம்பம் ஆடவுந் தெரியும்—விடுகிறாயா அல்லது நாம் இருவரும் ஒருகை பார்த்துவிடலாமா ... பெண்களிருக்கின்றனர் காட்சி பார்க்க!

உரு:—முதலில் நீ சொல்லவந்த நிஜத்தைச் சொல். பொய் உன்னை யார் சொல்லச்சொன்னது ?

தியா:—இந்தச் சட்டையைப்பற்றிப் பொய்சொன்னவன்தான்.

உரு:—உனக்கென்ன வேலையம்மா? பாட்டி சொன்னபடி-நீபோ உள்ளே.

காமா:—என்ன? நிஜமென்ன? நேரமாகிறது-சாமியார் பட்டினி!

துரை:—என்றும் நிஜமே...மெய் வெல்லும்;பொய் புன்மையே...

தியா:—இது பழமொழி — புதுமொழியில் இப்படியா—ஆம் ஒப்புக்கொள்கிறேன்...குஞ்சுவை— எனது தங்கைமகள ஆதிமூலத்தை நான் என்னுடன் எடுத்தேகவே இன்றைக்கு இவ்வூரில் இறங்கினேன்! ஆனால் அவளைக் காணாததால் காத்துக் கிடக்கிறேன் - கொண்டுவாருங்கள் அவளை எனக்கு உதவியாய்!

காமா :—பொய்யோடு மெய்கலந்தால்தானே கொஞ்சம் செவிக்கினிக்கும் அவளை முன்னதாக அனுப்பிவிட்டு மூட்டைகளைத் தூக்கிச்செல்ல வண்டி பார்த்துக்கொண்டிருக்கிறான்.

ராஜீ :—எம் வீட்டுக்கல்லவா வரப்போகிறார். அப்பாவிடம் சென்றாரே இப்போ !

உரு :—மூட்டைகளை உள்ளே கொண்டுபோடா, டே மாயாண்டி ! மாயாண்டி ! பறிமுதலே தண்டனை இவனுக்கு !

(இந்நிலை வருகிறான்)

காமா :—நான் கூப்பிடுகிறேன், அவனிடம் ஓடுகிறாயா? வா இங்கே! சுபத்திரை, நீ உள்ளேபோ—பொங்கிப் பாழ்த்திருக்கும் பால்!

உரு :—(இந்திரையின் வலதுகையைப்பற்றி இழுத்து) வா இங்கே, சாமியாரைக் காக்கப் போடுகிறாயா?

சுப:—இனிப் பயமில்லை, போகிறேன் (கொலு அறையில் மறைகிறாள்).

மாயா :—சாமியாரே விபூதி! விபூதி நெற்றிக்கே போதவில்லை!

காமா :—கண் திறவுங்கள்....வந்துவிட்டது குழந்தை!

துரை:—(மேலும் கீழும் தலையாட்டிக்கொண்டு) தெரியும்!

உரு :—நம் சாமியார் தன்மானத சக்தியாலல்லவோ இவளை ஈர்த்திருக்கிறார் இவ்விடத்திற்கு. பார் இவர் எதிர்வந்ததும் "அம்மா எங்கே!" என்று அலறுவதை மறந்துவிட்டாள், பார்!

ராஜீ :—வா, போகலாம் (தியாகுவைப் பிடித்திழுக்கச் சைகிலில் அருகே வருகிறாள்).

தியா :— சற்றே, சாமியார் என்ன செய்கிறார் பார்க்கலாம்.

இந் :—அன்னே! தாயே! அம்மா! எங்கே! (தியாகுவை நோக்கிவர).

தியா :—வாம்மா! உன் தாயின் சாயலே என் முகமும்.

காமா:-அங்கே போடீ! (இந்தியதேவியை இழுத்துத் துரைசிங்கனிடம் கொண்டுபோகிறாள்)

உரு :—காலையும் கையையும் கட்டிக்கொண்டு வாயைப் பொத்தி உட்காரிங்கே!

இந் :—அம்மா எங்கே? அம்மா எங்கே?

துரை :—(கண்விழித்து) வாம்மா! (பெருவிழிவிழிக்க)

தியா :—குழந்தை—இளவயது! —உனது மெஸ்மரிஸம் ஹிப்னடிஸம் ஜாலங்களைக் காட்டி, இளமனதைத் தன்போக்கிலிருந்து மாற்றிக்கெடுக்காதே! மெஸ்மரிஸ்க்கிறீரா சாமியாரே?

துரை :—(கண்சுளித்து) என்னது—என்ன குரல்?

உரு :—வாயை மூடு!

காமா :—அவரது நிஷ்டையைக் கலைக்காதே!—யோசிக்கிறார் ஆழ்ந்து.

ராஜீ :—எங்கப்பாவுக்கும், இவ்வளவு நீண்ட தாடி எப்போ முளைக்குமோ?

மாயா:—சாமியார் எடுக்கிறார் எதையோ—எனக்கு முதலிலே விபூதி.

இந்:—என் தாய் எங்கே? (உரக்க) அன்னாய்! அன்னாய்!

துரை:—இதோ அன்னை!

தியா:—ஹ ஹ! (சிரிக்கிறான்) ஹ ஹ ஹா!

ராஜீ:— ஆகா பளபளென! அழகே அழகு!

இந்:—(கோபமாய்) இதுவோ, என் அன்னை? நான் தேடும் அருமந்த தாய்? பொம்மைகள் என்னிடமிருப்பது போதும்.

காமா:—வெள்ளைக்காரப் பீங்கான்பொம்மை போலிருக்கிறதே இது!

உரு:—மந்திரித்து வைத்தது. இனி இதையே அம்மா என்று வைத்து மகிழும். வெறும் பொம்மையல்ல, பாருங்கள்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[447-வது பக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்.

238. செஞ்சினைத் தெரியலா னருளிச் செய்தது
தஞ்செவிக் கிசைத்தலுந் தணப்பில் கேள்வியார்
அஞ்சினர் நடுங்கின ராகி யாயிடை
நஞ்சிவர் வேலினான் பாத நண்ணினார். 1.

செம் சினைத் தெரியலான் - செந்தளிர்களை (பூவுடன் விரவித்) தொடுத்த மாலையையுடைய ஜடியரசன், அருளிச் செய்தது - கட்டளையிட்டருளியதை, தம் செவிக்கு இசைத்தலும் -(ஏவலாளர் வந்து)தம்மிடத்துச் சொன்னவுடன், ஆயிடை - அப்பொழுது, தணப்பு இல் கேள்வியார் - நீங்காத கேள்விஞானத்தையுடைய அமைச்சர், அஞ்சினர் நடுங்கினர் ஆகி-பயந்து நடுங்கினவர் ஆகி, நஞ்சு இவர் வேலினான் பாதம் - விஷம் பூசிய வேலையேந்திய அரசனுடைய பாதத்தை, நண்ணினார் - குறுகினார்.

'அஞ்சினர் நடுங்கின ராகி' என்றதற்குக் காரணம் புலப்படவில்லை. அரசன் அழைத்ததைக் கேட்டு அமைச்சர் அஞ்சுவது ஒருபோதும் இயல்பன்று; இப்பொழுது அவர்கள் அவ்வாறு அஞ்சி நடுங்குவதற்கு யாதொரு விசேஷ காரணமும் தோன்றவில்லை.

239. உள்ளுநின் றொலிபுறப் படாத தொண்சிறைப்
புள்ளுமல் லாதவும் புகாத நீரது
வெள்ளிவெண் விளிம்பினால் விளங்கு வேதிகை
வள்ளறன் மந்திர சாலை வண்ணமே. 2.

வள்ளல்தன்-அரசனுடைய, வெள்ளிவெண் விளிம்பினால் விளங்குவேதிகை மந்திரசாலை-வெண்மையான வெள்ளியாற்செய்த விளிம்புடன் விளங்கிய மேடையோடுகூடிய மந்திராலோசனைச் சபையின், வண்ணம்-தன்மை (எவ்வாறு இருந்ததெனின்), உள்ளுள் நின்று - உள்ளேயிருந்து, ஒலி புறம் படாதது - வெளியே சத்தம் கேட்கப்படாதபடி பளிங்கினால் இயற்றப்பட்டதும், ஒள் சிறை புள்ளும் அல்லாதவும் புகாத நீரது - ஒளிபொருந்திய இறகுகளையுடைய பறவைகளும் வேறெந்தப் பிராணிகளும் உட்புகாதபடி செய்யப்பட்டதும் ஆனது.

மிகவும் இரகசியமான யோசனையை அரசன் தனது அமைச்சரோடிருந்து செய்வதற்காக வெளியேயுள்ள உருவங்களை உள்ளே யிருப்பவர்களுக்குப் புலப்படுத்தலும், உள்ளேயுள்ளவர் பேசும் பேச்சை வெளியே தெரிவித்தலும் இல்லாதபடி பளிங்கினால் (கண்ணாடியால்) மந்திரசாலையை அமைத்தல் மரபு. இவ்வாறே இராவணன் யுத்த ஏற்பாடுகளைப்பற்றித் தனது மந்திரிமாருடன் ஆலோசிக்க வெண்ணிய போது, 'பொய்யெனப் பளிங்கினாய இருக்கையை எய்தினான்' என்றார் கம்பநாடரும். (யுத்த - அணி வகுப்பு—10).

240. ஆங்கமர்ந் தமைச்சரோ டரசர் கோமகன்
பூங்கமழ் மண்டபம் பொலியப் புக்கபின்
வீங்கொளி மணிக்குழை மிளிர்ந்து வில்விட
ஈங்கிவை மொழிந்தனன் இறைவ னென்பவே.

அரசர் கோமகன் - ஜடியரசன், வீங்கு ஒளி மணி குழை மிளிர்ந்து வில்விட - ஒளி மிக்க இரத்தினங்களிழைத்த குழைகள் விளங்கி ஒளிவீச, பூகமழ் மண்டபம் பொலிய புக்கபின் - பூமணம் பொருந்திய மண்டபம் பொலிவுறும்படி உள்ளே சென்றவுடன், ஆங்கு அமர்ந்து - அங்கே தனக்கென்று இட்ட ஆசனத்தி லிருந்து, அமைச்சரோடு - மந்திரிமார்களை நோக்கி, இறைவன்-அரசன், ஈங்கு இவை மொழிந்தனன் -பின்வரும் வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான். என்ப, ஏ, அசை.

வேறு

241. மண்ணிய வளாகங் காக்கும்
மன்னவர் வணக்க லாகாப்
புண்ணிய ரே ரேனும்
புலவராற் புகலப் பட்ட
நுண்ணிய நூலி னன்றி
நுழைபொரு ளறித றேற்றார்
எண்ணிய துணிந்து செய்யுஞ்
சூழ்ச்சியும் இல்லை யன்றே. 4.

மண்ணிய - கடல்நீரால் கழுவப்படும், வளாகம் காக்கும் - இந்தப் பூதலத்தைப் புரக்கும், மன்னர் - அரசர்கள், வணக்கல் ஆகா-பிறர் தம்மை வெல்லமுடியாத, புண்ணியர் ஏனும் - நல்வினையைச் செய்துள்ளவராய் இருந்தாலும், புலவரால் புகலப்பட்ட நுண்ணிய நூலின் அன்றி - பேரறிஞராகிய மந்திரிகளால் எடுத்து உரைக்கப்படும் நீதிநூல்களின் நுட்பமான பொருள்களால் அன்றி, நுழை பொருள் - தாம் செய்யப்புகும் காரியங்களைச் செய்து முடிக்கும் வழியை, அறிதல் தேற்றார் - அறியமாட்டார். எண்ணிய - செய்யக் கருதிய காரியங்களை, துணிந்து செய்யும் சூழ்ச்சியும் - மனவுறுதியோடு செய்யும் உபாயமும் இல்லை - இலதாகும். அன்று ஏ - அசை.

வளாகம் - வளைந்த, வட்டமான இடம். புலவர் - புலம், அறிவு. நூல் - (ஆகுபெயர்) நூற்பொருள். நுழைதல் - செய்யப் புகுதல். சூழ்ச்சி - ஆலோசித்து உணரும் நுண்ணறிவு என்றுமாம்.

242. வால்வளை பரவி மேயும்
வளர்திரை வளாக மெல்லாம்
கோல்வளை வுறாமற் காக்குங்
கொற்றவ னெடிய னேனும்
மேல்விளை பழியும் வெய்ய
வினைகளும் விலக்கி நின்றார்
நூல்வினை புலவ ரன்றே
நுணங்குபோ தணங்கு தாரீர். 5.

நுணங்கு போது அணங்கு தாரீர் - மெல்லிய பூக்களால் அழகுபெறக் கட்டிய மாலையை அணிந்தவர்களே, வால் வளை பரவி மேயும் - வெள்ளிய சங்குகள் இரையுண்டு திரியும், வளர் திரை வளாகம் எல்லாம் - மீண்டும் மீண்டும் எழுகின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட இந்தப் புவி முழுவதையும், கோல் வளைவு உறாமல் - செங்கோல் முறைமை கோணாமல், காக்கும் - காக்கின்ற, கொற்றவன் மன்னவன், நெடியன் ஏனும் - படை பொருள் முதலியவற்றால் நிரம்பியவனாக இருந்தாலும், மேல்விளை பழியும்- இனி விளையக்கூடிய வசையையும், வெய்ய வினைகளும் - அவ் வசைக்குக் காரணமான தீய செயல்களையும், விலக்கி நின்றார் - அவனை அணுகவொட்டாமல் தடுத்து நிற்பவர், நூல் வினை புலவர் அன்றே - நீதி நூல்களை நன்கு கற்றுணர்ந்த அறிவினையுடைய மந்திரிகளே ஆவர்.

நின்றார்-நிற்பவர், வினையாலணையும் பெயர் (துணிவு பற்றிவந்த கால வழுவமைதி) தாரீர் - தாரர் என்பதன் விளி.

243. சுற்றிநின் றெரியுஞ் செம்பொன்
மணிமுடி சுடரச் சூட்டி
வெற்றிவெண் குடையி னீழல்
வேந்தன்வீற் றிருக்கு மேனும்
மற்றவன் மனமுங் கண்ணும்
வாழ்க்கையும் வலியுஞ் சால்பும்
அற்றமி லரசுங் கோலும்
ஆபவர் அமைச்ச ரன்றே. 6.

வேந்தன் - அரசன், சுற்றி நின்று எரியும் செம்பொன் மணிமுடி சுடர சூட்டி - நாலாபக்கமும் நீங்காமல் பிரகாசிக்கும் செம்பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்யப்பட்ட கிரீடத்தை ஒளி வீசும்படி அணிந்து, வெற்றி வெண் குடையின் நீழல் - வெற்றியின் அறிகுறியான வெண்மையான குடையின் நிழலின் கீழ், வீற்று இருக்கும் ஏனும் - சிங்காதனத்தின்மீது வீற்றிருப்பான் ஆயினும், அவன்-அவனுக்கு, மனமும் - அறியும் அறிவாயும், கண்ணும் - காணுங் கண்ணையும், வாழ்க்கையும் - நல்வாழ்வை அளிப்பவரும், வலியும் - வலிமையைத் தருபவரும், சால்பும் - பெருமையைக் கொடுப்பவரும், அற்றம்இல் அரசும் - குற்றமற்ற அரசாட்சியை நிலைபெறச் செய்பவரும், கோலும் - அவனுடைய அரசாட்சிமுறை கொடுங்கோன்மை யென்று இகழப்படாமல் செங்கோன்மை யென்று புகழப்படும்படி செய்பவரும், ஆபவர் - ஆகின்றவர், அமைச்சர் அன்றே - அமைச்சர்களே ஆவார். அன்று, ஏ - அசை.

சூட்டி - சூட்டப் பெற்று; வேதவிதிப்படி மறையோரால் சூட்டப்படுதலின், 'சூட்டி' என்று பிறவினையாற் கூறினார். அற்றம் - குற்றம்.

244. வீங்குநீ ருலகங் காக்கும்
விழுநுக மொருவ னாலே
தாங்கலாந் தன்மைத் தன்று
தளையவிழ் தயங்கு தாரீர்
பாங்கலார் பணியச் சூழு
நூலவர் பாக மாகப்
பூங்குலா மலங்கன் மாலைப்
புரவலன் பொறுக்கு மன்றே. 7

தளை அவிழ் தயங்கு தாரீர் - முறுக்குடைந்து மலர்ந்துவிளங்கும் பூமாலையை அணிந்தவர்களே, வீங்கு நீர் உலகம் காக்கும் விழுநுகம் -கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தைப் பாதுகாப்பதாகிய காவற் சாகாட்டின் சிறந்த நுகத்தடி, ஒருவனுலே - ஒருத்தனுலே தனியே, தாங்கல் ஆம் தன்மைத்து அன்று - சுமந்து இழுக்கப்படும் தன்மைத்து அன்று; பூ குலாம் அலங்கல் மாலை புரவலன் - பூக்களால் அழகுபெறக் கட்டிய அசைந்தாடும் மாலையை அணிந்த அரசன், பாங்கலார் பணிய சூழும் நூலவர் பாகம் ஆக - பகையரசர் தன்னைப் பணியும்படி செய்யத்தக்க உபாயங்களைச் சொல்லும் நூல்களை அறிந்த மந்திரிகள் அந்த நுகத்தடிப் பாரத்தின் ஒரு பாகத்தைத் தாமும் வகிக்க, பொறுக்கும் - அதனைத் தாங்கும். அன்று - ஏ - அசை.

நுகம் - நுக்கத்தடி, அரசனும் மந்திரிகளும் இருபுறத்திலும் தாங்கி இழுக்கும் காவலாகிய வண்டியின் நுகத்தடி. (சாகாடு - வண்டி)

---

245. அற்றமின் றுலகங் காக்கு
மருந்தொழில் புரிந்து நின்றான்
கற்றவர் மொழிந்த வாய
கழிப்பது கடன தாகும்
மற்றவற் குறுதி நோக்கி
வருபழி வழிகண் ரேஞ்
செற்றவர்ச் செகுக்குஞ் சூழ்ச்சி
தெருண்டவர் கடவ வன்றே. 8.

அற்றம் இன்றி - சோர்வின்றி, உலகம் காக்கும் - உலகங்களைக் காக்கும், அரும் தொழில் - அருமையான அரசாளுந் தொழிலை, புரிந்து நின்றான் - நடத்தும் அரசன், கற்றவர் மொழிந்த ஆய - நூல்களையுணர்ந்த மந்திரிமார் சொல்லும் உறுதிமொழிகளின்படி, கழிப்பது - ஒழுகுவது, கடன் அது ஆகும் - கடமையாகும்; அவன்கு உறுதி நோக்கி - தம் மன்னனுடைய நன்மையைக் கருதி, பழிவருவழி-பழிப்புக்கிடமான செயல்கள் நேர்ந்தபோது, கண்ரேம்-அவற்றிற்குப் பரிகாரமான நன்மருந்து போன்ற ஆலோசனையைச் சொல்லுதலும் அதன்படி அரசனை நடப்பித்தலும், செற்றவர் செகுக்கும் சூழ்ச்சி தெருண்டவர்-பகைவர்களை அழிக்கும் உபாயங்களை நன்றாய்த் தெளிந்தறிந்த மந்திரிகள், கடவ - செய்யக்கடவனவாகும். அன்று ஏ - அசை.

கழிப்பது - செய்துமுடிப்பது. மற்று, அசை. பழிவருவழி என மாற்றுக. கண்ரேம் - கண்டௌஷதம்; வியாதியால் பீடிக்கப்பட்டவன் ஒருவனுடைய உயிர்க்கிறுதி நேரிடக்கூடிய ஆபத்துநிலையில் கொடுக்கப்படும் ஒருவகை மருந்து; இங்கே அரசனுக்குப் பழியும் பாவமும் நேரிடக்கூடிய ஆபத்துக்காலத்தில் அவற்றை மாற்றும் உபாயம். இக்கருத்துப் பற்றியே கம்பநாடரும் மந்திரிகளை,

நல்லவுந் தீயவும் நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பின் எண்ணுவார்

என்றார்.

---

246. செறிந்தவர் தெளிந்த நூலார்
சிறந்தவை தெரிந்து சொன்னால்
அறிந்தவை யமர்ந்து செய்யு
மமைதியா னரச னவான்;
செறிந்தவர் தெளிந்த நூலார்
சிறந்தவை தெரிந்து கூறி
அறிந்தவை யியற்று கிற்கு
மமைதியார் அமைச்ச ராவார். 9.

செறிந்தவர் - இயற்கை அறிவு பொருந்தியவரும், தெளிந்த நூலார் - நூல்களைக் கற்றுத் தெளிந்தவருமாகிய அமைச்சர், சிறந்தவை தெரிந்து சொன்னால் - இவை நல்லகாரியம் என்று ஆராய்ந்து உணர்ந்து தனக்குச் சொன்னால், அவை அறிந்து - அவற்றைத் தானும் அவ்வாறே தெளிந்து, அமர்ந்து-மனமுவந்து, செய்யும் அமைதியான் - செய்யும் மனப்பாங்கை உடையவனே, அரசன் ஆவான் - நல்லரசன் ஆவான். செறிந்தவர் தெளிந்தநூலார் சிறந்தவை தெரிந்து கூறி—, அறிந்து அவை இயற்றுகிற்கும் - அரசன் அவற்றை அறிந்து நடக்கும்படி செய்யும், அமைதியார் - தன்மையரே, அமைச்சர் ஆவார் - நல்லமைச்சர் ஆவார்.

அமர்ந்து - விரும்பி, மனமுவந்து.

---

247. வாள்வலித் தடக்கை மன்னர்
வையகம் வணக்கும் வாயில்
தோள்வலி சூழ்ச்சி யென்றாங்
கிருவகைத் தொகையிற் றாகும்;
ஆள்வலித் தானை யார்கட்
காதிய தழகிற் றேனும்
கோள்வலிச் சீய மொப்பீர்
சூழ்ச்சியே குணம தென்றான். 10.

கோள் வலி சீயம் ஒப்பீர் - கொலைத்தொழிலையும் பலத்தையும் உடைய சிங்கத்தைப்போன்றவர்களே, வாள்வலி தட கை மன்னர்-வாளின் வலியையுடைய பெரிய கைகளையுடைய அரசர், வையகம் வணக்கும் வாயில் - உலகத்தைத் தமது ஆட்சியின்கீழ்ப் படுக்கும்வழி, தோள் வலி - தனது தோளாற்றல், சூழ்ச்சி - மந்திரிகளின் ஆலோசனையாகிய உபாயம், என்று - என்று, இருவகை தொகையிற்று ஆகும் - இரண்டு வகைப்படும். (அவற்றுள்) ஆதியது - முதலாவதான தோள்வலி, ஆள்வலி தானையார்கட்கு - வலி பொருந்திய ஆட்படைமுதலிய நால்வகைச் சேனைகளையுமுடையவர்களுக்கு, அழகிற்றேனும் - அழகிய தொன்று ஆயினும், சூழ்ச்சியே - உபாயமே, குணம் அது ஆகும் - சிலாக்கியமாகும்.

வகை - தொகை, இரண்டும் ஒரே பொருளன. ஆள் தானை - ஆளாகிய படை, ஆள் வலி - ஆளும் வலித் தானையென வினைத்தொகையாகவும் கொள்ளலாம். கோள் - கொலை. குணம் அது - 'அது' பகுதிப் பொருள் விகுதி.

கலைமகளந்தாதி.

காப்பு

கலைமகளந் தாதி கவினுறவே சொல்ல
அலைமகளன் பார்ந்தோ னடியை—நிலையுறவே
யேத்துங் குருகைநக ரெம்மாழ்வார் வந்தருளித்
தீர்த்தருளும் மாசினைநெஞ் சே.

நூல்

பார்தந்த வன்பர் பணியும் பதாம்புயத்தோய்
சீர்தந்த நான்முகத்தோன் றேவியே—யேர்தந்த
நல்லருளார் வேல்விழியாய் நம்பு மடியேனை
நல்லருளார் கூட்டமே நாட்டு. 1.

நாட்டுவே னென்றலையை நளினத் திருவடியில்
கூட்டுவேன் நீநெஞ்சைக் கோமளமே—வீட்டுவே
னன்பாரை யேசு மவரையே யெஞ்ஞான்று
மென்பாரை யேத்துவேனி யான். 2.

யானிப் புவியி னிடையே யுடலெடுத்தும்
வானித் திலமேனி மாதரசே—தேனித்து [துட்
நின்குணத்தாழ்ந் தின்பெய்தா நீசனேன் முக்குணத்
பின்குணத்தாழ்ந் தென்பெறுவேன் பேசு. 3.

பேச்சதுவோ செந்தேனைப் பெய்துகற் கண்டளாய்க்
காய்ச்சிரச மாமென்னுங் கன்னியர்பால்-கூச்சமுற்றுச்
சேரா வணமருளாய் செவ்வா யுருப்படிகம்
நேராம் வணமுடையாய் நேர்ந்து. 4.

நேசித்துன் மெல்லடியை நெஞ்சிருத்தி யெந்நாளும்
பூசித் திருக்கப் பொழியருளே—மாசித்தர்
மேவுந் திருப்புகழாய் வெண்டா மரைமலரில்
மேவுந் திருக்கனுமம் மே. 5.

மேதினியி னின்பதத்தை மேவிப் புகழ்வேற்கி
யாதினியிங் கேயா தியம்புவாய்—தாதியைவெண்
கஞ்சத்தாய் நற்கருணைக் கண்ணு யடியனே
னெஞ்சமே மன்னுவாய் நீ. 6.

நீயேயென தன்னை நீயேயென் தந்தையும்
நீயே யெனக்கமைந்த நேருறவும்—நீயேயென்
றெண்ணினே னென்னை யிணைப்பதத்திற் சேர்த்துவாய்
பண்ணினேர் சொன்மகளே பார்த்து. 7.

பாரதியே யென்றுன்பதம் வணங்கா தன்பனேன்
மாரதியே போலு மடவாரை—யாரமுதென்
றெண்ணிப் புகழ்ந்தே யிருக்குமதோ சொல்லாய்நீ
எண்ணிற் பொலிபவளே யிங்கு. 8.

இங்குன் பதம்வணங்கா தேழை யிருப்பினும்நீ
மங்குனிறக் கூந்தன் மயிலனையா—யெங்கும்
புகழுற்ற பாரதியே புந்தியி லுன் னுமை
மிகழுற் றிடாதவா மீ. 9.

இனியா னுனையன்றி னேத்துவேன் மற்றிங்
கினியா ரெனக்கே யினியார்—இனிய
துடியா ரிடையாய் துரிசில் கலையோய்
அடியா ரிடையா னமர்ந்து. 10.

அம்மா நிலந்தந்த வம்புயத்த னுவினே
டம்மாவென் றேத்துமடி யார்நெஞ்சுஞ்-செம்மையாம்
வேதமுத லானவையும் விட்டெனுளம் வீற்றிருப்பாய்
ஏதமுத லற்றிடவே யின்று. 11.

இன்றேவென் [illegible] லை நம்பிநம்பி
மென்[illegible] ன்றென்றும்
கேடுறுதல் நன்றலவே கீதமக ளேமுத்தி
நாடுறுதல் செய்வாய் நயந்து. 12.

நயவேன் பிறரைமிக நாடுவே னுன்னை
யுயவே வழியொன் றுரையாய்—நயவண்டு
சேரும் வெளைக்கஞ்சத் தெய்வா தனத்திரு
யாரும் புகழுமணங் கே. 13.

அன்பே யுருவெடுத் தன்ன கலைமகளே
நின்பே ருரைக்காதார் நெஞ்சத்தி—லொன்றாதா
யுன்னையான் போற்ற லொருபணியா மெற்குனக்கோ
வென்னையே யேற்றல் பணி. 14.

பணிகின்ற வாழ்வெனக்குப் பாலித் திடுவாய்
மணியொன்று மௌலி நுதன் மாதே—குணமுடைய
நெஞ்சத்தார் போற்று நிமலையே யுன்னினிய
கஞ்சத்தேய் பாதங் களித்து. 15.

கம்பன் முதலோருன் கஞ்சப் பதம்புகழ்ந்தே
யும்பர்முதலோர்புகழவே யோங்கினார்—அம்புயத்தோ
னில்லக் கிழத்தியே யென்னமுதே நின்பெருமை
சொல்லத் தரமாமோ சொல். 16.

சொன்மகளே வேதன் றுணைவியே யாவுமாம்
நன்மகளே வெண்ணிறத்து நங்கையே—வன்மயிலா
உன்றனடி யாரை யொருவா திருந்திடவே
யென்றனக்கு நல்லவர மீ. 17.

நல்லோர் புகழ்ந்தேத்து நாமகளே பாரதியே
அல்லார் நிறக்கூந்த லம்மையே—நல்லோய்
உனைவிரும்பிக் கீர்த்தி யுறலாமென் றெண்ணு
மெனைவிரும்பிக் காப்பா யினி. 18.

இன்னமுன் னெஞ்ச மிரங்கவிலை யோவுனக்குக்
கன்மனது தானோ கழறுவாய்—நன்மைதரு
நான்மகளே மேலோர் நுவலும் பெரும்பொருளா
மேன்மகளே வாராய் விரைந்து. 19

விரிநீர்க் கடல்சூழு மேதினியோர் போற்ற
விரிநீர்க் கடல்போலு மேலா—மருந்தமிழை
யைய மறக்கற்க வருள்புரிவ தெந்நாளோ
துய்யர்புகழ் நாமகளே சொல். 20

சொல்லும் பொருளுந் துலங்கக் கவிபாடி
வெல்லுந் திறமருள வேண்டுமால்—தொல்லை
மலைமக ளேத்துமொரு மாங்குயி லன்னாய்
கலைமகளே யுள்ளங் கனிந்து. 21

உள்ளுவா ருள்ளமெல்லா முன்னையே யாமினிய
கள்ளுவார் கூந்தற் கலைமகளே—தெள்ளிய நூ
லெல்லா முணர்ந்தே யெளிதிற் பொருளுரைக்க
வல்லவா றென்று வதி. 22.

நாமேவும் பொன்னே நலமாம் பொருளமைந்த
பாமேவு மானே பனிமொழியே—தூமேவு
மேவலர்முன் னூனயங்க ணன்றே விரித்துரைக்கச்
சீலமுடனென் மனத்தே சேர். 23.

சேல்போற் றிருக்கண்ணாய் தேவருணு மாரமுதே
பால்போல் மொழியாய் பரிவுடனே—சால்புடைய
எல்லோரு மென்கவியை யோகையுடன் பாராட்ட
நல்வரங்கள் நல்காய் நயந்து. 24.

செந்தமிழின் தெய்வமே சின்முத்திரைக் கரத்தாய்
நந்தாப் பெரும்புகழ்சேர் நாமகளே—பைந்தாதார்
வெண்டா மரைமகளே மெல்லியலே யுன்றனுக்குத்
தொண்டானேன் காப்பாய் துணிந்து. 25.

188922

யாப்பிலக்கணம்

தொடை—அளபெடை, இரட்டை, அந்தாதி, செந்தொடை

[455-வது பக்கத் தொடர்ச்சி]

மெய்யெழுத்தேனும் உயிரெழுத்தேனும் தம் மாத்திரைக்கு அதிகமாக அளபெடுத்து ஒலிக்கின்ற அளபெடையின் இலக்கணத்தை 30-வது பக்கத்தில் சுருக்கமாகவும், முன்னைய ஆண்டு இதழ்களில் விரிவாகவும் வரைந்திருக்கின்றோம். அவைகளை இங்கு நினைவுபடுத்திக் கொள்க.

இவ்வளபெடை நயமுற அமையும்படி தொடுப்பது அளபெடைத்தொடை. இயைபுத்தொடை ஒன்று தான் அடியின் இறுதிச் சீரையும் ஈற்றெழுத்தையும் பொருந்தியது. மற்ற மோனை எதுகை முரண்தொடைகளைப்போல், அளபெடைத் தொடையும் அடியின் முதற்சீரையும் அம்முதற் சீரின்கண் உள்ள எழுத்துக்களையும் பற்றி அமைவதாம்.

> ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
> தாஅ மிதற்பட் டது. (குறள்)

[பிரிவாற்றாளாய தலைமகள், நித்திரையின்றியும் துயரத்தாலும் கலங்கிக் கலுழ்கின்ற தன் கண்களைக் குறித்துத் தோழிக்கு உரைத்தது இது. இதன் பொருள்!—காதலனை முதலில் காட்டித்தந்து எனக்கு இந்தக் காமநோயை உண்டாக்கிய கண்கள் தாமும் இப்பொழுது அந்நோய் வாய்ப்பட்டு வருந்துவதைக் காண, "என்னைக்கெடுத்த இக்கண்களுக்கு இந்நோய் வந்தது நன்றே" என என்மனம் இனிது குளிர்கின்றது.]

இதனில், முதற்சீராய் நின்று அளபெடுத்த ஓ என்னும் எழுத்திற்கிணங்க அடுத்த அடி முதலிலும் தா என்னும் எழுத்தும் அளபெடுத்து ஒன்றியது. எழுத்தின் ஒலியால் ஒன்றத்தொடுக்கும் மோனையும் எதுகையும், ஈற்றெழுத் தொன்றிய இயைபும், அடியின் முதற்சொல்லோடு மாறுபடின் முரண்தொடையும், ஈற்றுச் சொல்லோடு ஒன்றினால் இயைபுத்தொடையும் ஆகும். மற்று, தமக்குரிய அளவின் மிகுதியால் எழுத்துக்கள் ஒன்றும்படி தொடுப்பது அளபெடைத்தொடை.

இப்படி ஒரே எழுத்து அளபெடுத்து அடியின் முதற்சீராகி ஒன்றுவதைத் தனிநிலை யளபெடைத் தொடை என்பர்.

எனினும் தனியெழுத்துத்தான் அளபெடுத்து ஒன்றுதல் வேண்டுமென்னும் நியதியில்லை. ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமைந்த முதற்சீரின் எவ்வெழுத்து அளபெடுத்து ஒன்றிவரினும் அளபெடைத்தொடை யாகும்.

> பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
> நாஅல் வேத நெறிதிரியினும் (புறநானூறு)

எனவரும் இதனில், ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களுடைய முதற்சீர்களின் முதலெழுத்து அளபெடுத்துஒன்றின. இதனை முதனிலை அளபெடைத் தொடை என்பர். அல்லது இப்படி முதலெழுத்து அளபெடுத் தொன்றுவதை மோனை யளபெடைத்தொடை என வழங்குதலும் உண்டு.

அல்லது, முதற்சீரின் நடுவெழுத்து அளபெடுத்து ஒன்றியும் அளபெடைத்தொடை யாகலாம்:—

> சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
> துனைஇய மாலை துன்னுதல் காணூஉ
> (குறிஞ்சிப் பாட்டு.)

இவ்வாறு நடுவெழுத்து அளபெடுத்து ஒன்றிவருவதை, இடைநிலை அளபெடைத்தொடை என்பர். அல்லது, எதுகை அளபெடைத்தொடை என்றும் அதனை வழங்குவதுண்டு.

அல்லது, முதற்சீரின் இறுதியெழுத்து அளபெடுத்து ஒன்றியும் வரலாம்:—

> மகாஅ ரன்ன மந்தி மடவோர்
> நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
> (சிறுபாணாற்றுப்படை)

இப்படி முதற்சீரின் ஈற்றெழுத்து அளபெடுத்து ஒன்றுவதை, இறுதிநிலை அளபெடைத்தொடை என உரைப்பர்.

> மேஎல் விசும்பு விழைபாக் கயமைதான்
> கீஇழ்க் குனியுங் கிடந்து.

என அமையுமெனின், மேஎல்-கீஇழ் என்று ஈரடியிலும் அளபெடுத்து ஒன்றுவதுமன்றி, அவை முரண்படவும் நிற்றலால், இதனை முரணளபெடைத்தொடை என்று இயம்பலாம்.

> கடாஅவுக பாகதேர் காரோடக் கண்டே
> கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்
> படாஅ மகிழ்வண்டு பாண்முரலுங் கானம்
> பிடாஅப் பெருந்தகை நற்கு. (கார்நாற்பது)

[கார்காலத்தில் தான் மீண்டுவருவதாகத் தன் மனைவிக்கு வாக்களித்துச் சென்ற காதலன், கருமம்முற்றி மீள்வதற்குள் கார்காலம் சேர்ந்துவிடத் தன்பாகனை விரையத் தேர் ஓட்டும்படி தூண்டுகின்றதைச் செப்புகின்றது இச்செய்யுள். இதன் பொருள்:—பாகனே, வள்ளல்களிடம் சென்று பரிசில்பெறக் கவிபாடும் பாவலர்களைப்போல், குறையாத மகிழ்வுடைய வண்டுகள் காட்டின்கண் பெருந்தகைமையுடைய பிடவமரத்துக்குப் பாட்டு இசைத்துக்கொண்டிருக்கின்றன. (பிடவமரம் பூத்தல் கார்காலம் வந்ததற்கு அடையாளம்.) மேகங்கள் வேகமாக ஓடக் காண்கின்றாய்—ஓடும் மேகங்கள் என் நாயகி இருக்குமிடத்தை எமக்குமுன் சேருமாயின், இவைகளைக் கண்டு கார்காலம் வந்துவிட்டதென்று உணர்ந்துகொண்டு யா னின்னும் வாராமைக்கு மிகவருந்துவாள், ஆதலால் இம்மேகங்களிற்குமுன் நான் போய்ச்சேர வேண்டும்.) ஆகையால், அழியாத புகழிற்கு அவாவுகின்ற செல்வர்களது மனம் அப்பொருளை அளித்தற்கு எவ்வளவு வேகமாக விரையுமோ அவ்வளவுவிரைவாகத் தேரைச் செலுத்துவாயாக]

இந் நான்கடிச் செய்யுளில் அடிதோறும் முதற்சீரில் அளபெடை வந்து அளபெடைத்தொடை யமைந்தது. எதுகை எழுத்தாகிய இரண்டாமெழுத்து அளபெடுத்திருத்தலால் இது எதுகை அளபெடைத் தொடை.

மோனை எதுகை முரண் இயைபு ஆகிய இத்தொடைகளைப் போல் அளபெடையும் அடிதோறும் அமைந்து அத்தொடை யாவதுமன்றி ஈரடியிலேயே

முதற்சீருடன் மற்றோர்சீர் அளபெடைஎழுத்துடையதாகி ஒன்றுவதும் அளபெடைத் தொடையே.

> 'வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை'
> (பொருநராற்றுப்படை)

என்னுமிவ்வடியில், முதற்சீரிலும் மற்றொருசீரிலும் எழுத்து அளபெடுத்து ஒன்றியிருப்பதால் அளபெடைத்தொடை அமைந்தது.

> உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
> லொல்லை யுணரப் படும். (குறள்)

இக்குறளின் முதலடி முதற்சீரும் ஈற்றுச்சீரும் அளபெடுத் தொன்றி அளபெடைத்தொடை யாயின.

இதுவரையிற் காட்டிய உதாரணங்களிலெல்லாம் அளபெடுத்திருப்பன உயிரெழுத்துக்களேயாயினும், இவ்விதமே மெய்யெழுத்துக்கள் அளபெடுத் தொன்றியும் அளபெடைத்தொடை அமைதல் கூடும்.

> இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
> கலங்ங்கு நெஞ்சமிலை காண்.

> மடங்ங் கலந்த மனனே களத்து
> விடங்ங் கலந்தானை வேண்டு.

என, ங் என்னும் மெய் ஈரடியிலும் அளபெடுத்து ஒன்றியதால் அளபெடைத்தொடை யமைந்தது.

> அம்ம் பவள்ள் வரிநெடுங்க ணய்வஞ்சிக்
> கொம்ம் பவள்ள் கொடிமருங்குல் கோங்கின்
> அரும்ம் பவண்முலை யொக்குமே யொக்கும்
> கரும்ம் பவள்வாயிற் சொல்.

என்னுமிச் செய்யுளில் நான்கடிகளிலும் முதற்சீரில் மகரமெய் அளபெடுத் தொன்றியதால் அளபெடைத் தொடை யமைந்தது. இதனோடு முதலிரண்டடிகளின் இரண்டாஞ்சீரி னீற்று ளகரமெய் அளபெடுத்தலாலும் அளபெடைத் தொடையாகும்.

> கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
> பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
> மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலாள்
> என்ன் பிறமகளா மாறு.

என்னுமிச் செய்யுளில், முதலடி முதற்சீரில் ணகரமெய்யும், மற்ற அடிகளின் முதற்சீரில் னகரமெய்யும் அளபெடுத்து அளபெடைத்தொடை அமைந்தது.

உயிரும் மெய்யும் அன்றி ஆய்தவெழுத்து அளபெடுத்தும் அளபெடைத்தொடை யமையலாம்:—

> விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாதர்
> இலஃஃகு முத்தி னினம்.

> எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
> வெஃஃகு வார்க்கில்லை வீடு.

இதனில், ஈரடியிலும் முதற்சீரில் ஃ என்னும் ஆய்தவெழுத்து அளபெடுத்து அளபெடைத்தொடை யமைந்தது.

இதுகாறும் உரைத்த ஐவகைத்தொடைகளினும், மோனையும் எதுகையும் மிகவும் முக்கியமானவை. முரண்தொடையும் செய்யுள்கள் பலவற்றில் காணப்பெறுகின்றது. இயைபுத்தொடையும் அளபெடைத் தொடையும் மிகவும் அருகிவருவன.

இவைகளன்றி, இரட்டைத்தொடை, அந்தாதித் தொடை, செந்தொடை என இன்னும் மூன்று வகைத் தொடைகளும் உள.

இரட்டைத்தொடை.

ஓரடி முழுவதும் வந்த சொற்களே - (ஒரே பொருளிலேனும் வேறு வேறு பொருளிலேனும்) சீர்களாய் வருமாயின் அதனை இரட்டைத்தொடை என்பர்.

> வாழுமே வாழுமே வாழுமே வாழுமே
> கூழேனு மீவார் குடி.

என்னுமிதனில், முதலடி நான்குசீர்களும் 'வாழுமே' என்னுஞ் சொல்லால் ஆயின. இது இரட்டைத் தொடை.

> மாயுமே மாயுமே மாயுமே மாயுமே
> ஈயாதா ரீட்டுந் திரு.

என்பதும் அன்னதே. ஈற்றுச்சீரின் இறுதி சிறிது மாறியிருப்பினும் இரட்டைத்தொடை கெடாது.

> ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
> விளக்கினிற் சீரெரி யொக்குமே யொக்கும்
> குளக்கொட்டிப் பூவி னிறம்.

இதனில், முதலடி ஈற்றுச்சீரில் ஏகாரம் குறைந்திருப்பினும் இரட்டைத்தொடை ஆயிற்று. (முதலடியீறும் இரண்டாமடியின் யீறும் 'ஒக்கும்' என்ற சொல்லால் ஒன்றியிருப்பதனால் அது இயைபுத் தொடை).

இவ்வுதாரணங்களில், ஒரு சொல் ஒரேபொருளில் வந்தன. பல பொருள்களில் ஒரே சொல் சீர்களா யமைந்து இரட்டைத்தொடை ஆவதற்கு உதாரணம் பின்வருமாறு.

> ஓடையே யோடையே யோடையே யோடையே
> கூடற் பழனத்துங் கொல்லி மலைமேலு
> மாறன் மதகளிற்று வண்பூ நுதன்மேலுங்
> கோடலங் கொல்லைப் புனத்துங் கொடுங்குழாய்
> நாடி யுணர்வார்ப் பெறின்.

[கூடல் பழனத்தும் ஓடையே (நீரோடை); கொல்லி மலைமேலும் ஓடையே (மலைவழி); மாறன் மதகளிற்று வண்பூ நுதன்மேலும் ஓடையே (நெற்றிப்பட்டம்); கோடலம் கொல்லைப்புனத்தும் ஓடையே (ஒருவகைச்செடி)]

அந்தாதித்தொடை

ஓரடியின் இறுதியிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும், அடுத்த அடியின் முதலாக அமையும்படி தொடுப்பது அந்தாதித்தொடை. (ஒரு அடியின் அந்தம் மற்ற அடிக்கு ஆதியாவது என்பது இதன் பொருள்). ஒரு செய்யுளின், ஈற்றடியேனும், ஈற்றுச்சீர் அசை எழுத்து முதலியவேனும் அடுத்த செய்யுளின் முதலாகவருவதும் அந்தாதித் தொடையே. சூளாமணி 213, 214, 215-வது செய்யுள்களிற்போல் ஒரு செய்யுளிலேயே, வந்த அடியே மீண்டும் வருவதும் அந்தாதித்தொடை.

> வேங்கையஞ் சாரலோங்கிய மாதவி
> விரிமலர்ப் பொதும்பர் மெல்லியன் முகமதி
> திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே.

இதனில், செய்யுளின் முதலெழுத்தும் கடையெழுத்தும் ஒன்றுவதுடன், ஒவ்வொரு அடியின்கண் உள்ள ஈற்றெழுத்தும் அடுத்த அடியின் முதல் எழுத்தாவதுங் காண்க.

> பேதுற விகந்த பெருந்தண் காவிரி
> விரிதிரை தந்த வெறிகமழ் வாசஞ்
> சந்தனக் குழம்பு முலைமிசைத் தடவிய
> வியனறுங் கோதைக்கு மெல்லிதா நுசுப்பே.

செய்யுள் முதலெழுத்தோடு(பே) ஈற்றெழுத்தும் ஒன்றுவதோடு, ஓரடியின் ஈற்றுஅசை வருமடியின் முதலசையாவதுங் காண்க.

முந்நீ ரீன்ற வந்நீ ரப்பி
யிப்பி யீன்ற விலங்குகதிர் நித்தில
நித்திலம் பயந்த நேர்மண லெக்கர்
எக்க ரிட்ட வெறிமீ னுணங்க
லுணங்க........................

இதனில் ஓரடியின் ஈற்றுச்சீருடன்வருமடியின் முதற்சீரொன்றி அந்தாதித்தொடை யமைந்தது.

செந்தொடை

தொடை என்பதற்குப் பூமாலை என்பது பொருள். இவ்வண்ணம் எழுத்து சீர் சொல் அடி முதலியவைகளை ஒன்றவும் முரணவும் அழகுறப் பூமாலையைப் போல் தொடுப்பதால் செய்யுளின் இவ்வுறுப்பிற்குத் தொடை எனும் பெயர் அமைந்தது. எனினும் மேற்சொன்ன மோனை எதுகை முதலிய எழுவகைத் தொடையொன்றும் செயற்கையா யமைக்கப்பெறாது அசை சீர் இசை முதலியவைகள் தாமே ஒழுங்குற அழகாய் இயைவனவாகி இன்பம்பயக்கும் செய்யுள்களும் உள. அவ்வாறு அமைந்த செய்யுளைச் செந்தொடைச் செய்யுள் என்பர்.

நெருப்பி னன்ன செந்தலை யன்றில்
இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவி னோங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநங் காதலர் வரவே.

(குறுந்தொகை)

இதனில், மோனை எதுகை முரண் இயைபு அளபெடை அந்தாதி, இரட்டை என்னும் அவ்வெழுவகைத் தொடைகளில் ஏதும் வந்தமையாமை காண்க. எனினும் செயயுளோ தன் இயர்கை அழகினுல் சிறந்து விளங்குகின்றது. இது செந்தொடை.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[453-வது பக்கத் தொடர்ச்சி]

காலத்தாற் றேர்ந்த கலை.

தனித்துயரால் தளர்வுற்ற தயாதன்ற னுள்ளத்தில் இயையா நினைவுகள் இகலித்தோன்றின. மூப்பிடையே மாதவத்தால் பெற்ற தன்னொரு முதல் மணிப் புதல்வனுக்குத் தான் அரிதின் புனையப் புரிந்த கோலமும் அன்னதற்கு மாறாய் அவனை எய்திவந்த கோலமும் மனத்தகத்தே மாறுட மதிமாழ்கி,

பூணா ரணியும் முடியும்
பொன்னா சனமுங் குடையுஞ்
சேணார் மார்புந் திருவுந்
தெரியக் காணக் கடவேன்
மாணா மரவற் கலையு
மானின் றோலும் மவைநான்
காணா தொழிந்தே னென்று
னன்றாய்த் தன்றே கருமம்

[ஆபரணங்களணிந்த அலங்காரமும் கிரீடமும் பொற்சிங்காதனமும் வெண்கொற்றக்குடையும் அகன்ற மார்பும் அதனில் அமர்ந்த இலக்குமியும் கண்ணாரக் காணவேண்டிய நான், உனக்குப் பொருந்தாத மரவுரியும் மான்தோலும் அனையவைகளைக் காணாது போவேனாயின் எனக்கது அழகாகுமா]

என்று பலவாறு புலம்பிய அரசன் இன்றே டிறந்தானென உழையோர் நடுங்க ஆவிதேய்ந்து பேச்சுமூச்சற் றயர்ந்தனன். இவன்பால் இனி, உயிருண்டோ இல்லையோ என்று சோதிக்க மந்திரம் ஒன்றேயுளது. சோதிப்பதுடன், போகின்ற உயிரைப் போகாது இழுக்கும் ஆற்றலுமுடைய அம்மந்திரத்தை வசிட்ட மாமுனிவன் செவ்விதினறிவான். ஆதலினிவ் வேதியன், "வேந்தே, அயரேல், அவனை இன்று ஏகாத வண்ணந் தகைவென் உலகோரடு காண்" என்று உறுதி கூறி இராமனைக் கொணரச் செல்பவன்போ லவ்விடம் விட் டகன்றனன். அக்கணமே முடிபப்புக்க மன்னவனின்னுயிர் இதனால் சற்றே நின்றதெனினும் அவனுணர்வு மீண்டிலது. தணந்தான்கொல் உயிர் என்று கோசலை துணுக்கமெய்தினாள். "எம்மைத் துறந்தகன்றான் மகனென்று ஆற்றாது அழுங்குமென்னைத் துணை நின்று தேற்றாமே, நீயும் இறந்தொழிந்தால் அறமாமோ ஐயா, அரசர்க்கரசே" என்னக் கூறி,

மெய்யின் மெய்யே யுலகின்
வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் னுயிரை
யோம்பா திங்ஙன் றேம்பின்
வையம் முழுதுந் துயரான்
மறுகும் முனிவன் னுடனம்
மையன் வரினும் வருமா
லயரே லரசே யென்றாள்

[மெய்ம்மைக்கே ஓர் மெய்மைபோன்றவனே, அரசர்களுக்கெல்லாம் அரசே, பிழைத்திருக்கும்வண்ணம் உன்னுயிரைக் காவாது இப்படித் தேம்பினால், உலகம் முழுவதும் துயரத்தால் மறுகுமே; முனிவனுடன் நம்மைந்தன் ஒருகால் வந்தாலும் வருவான். அதற்கிடை, அரசே நீ வறிதே அயர்ந்தழிந்தால் என்னாம், என்றாள் கோசலை]

'இராகவன் ஏகாவண்ணம் தடுப்பேன்' என்று சென்ற வசிட்டனது வாசகத்தைப்பற்றித் தொங்கிய மன்னவனுயிரினுள், "ஐயன் வரினும் வரும்" என்ற இக்கோசலையின் குரல் உணர்வுந் தூண்டிற்று. தூண்டவே, தன் மெய்யும் இருதாள் இணையும் முகமும் செய்ய கைகளால் தைவரும் கோசலையை, ஒன்றுந் தெரியாமல் மயங்கியிருந்த அரசன், இளகி நோக்கி, "வன்றிண் சிலைநம் குரிசில் வருமே வருமே" என மெள்ள வினவினன். முதியோரும் பாலகரும் ஓரோவழி உள்ளத்தா லோரளவு காட்டு மியல்பினரென்னு மிது வழக்கே. "வன்றிண் சிலைநம் குரிசில் வருமே வருமே" என ஆர்வமுடன் வினவிய இவ் வாதரம் பெருகு வாசகம், பருவம் மூன்றேனும் முதிரா மகவிற்கே தகவுடைத்தாம். இச்சொற் கேட்டும் பிளவாத நெஞ்சம் கல்லென்றாலும் அமையாது. கல்லுமிது கேட்டால் கரைந்துருகும். கல்லினுங் காழ்கொண்டது கைகேசியின் உள்ளமே. கல்லும் இரும்பும் கலந்துருக்கி வார்த்ததொரு சிலைபோல் அசையாது அமைந்த அம்மாதினை நோக்கினான் அரசன்,

வன்மா யக்கை கேசி
வரத்தா லென்றன் னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா
ளேனுங் கூனி மொழியாற்
றன்மா மகனுந் தானுந்
தரணி பெறமா றன்றி
என்மா மகனைக் கானே
கென்றா ளென்றா ளென்றான்.

[வலிய வஞ்சனையுடைய கைகேசி, வரத்தினால் என் உயிரைக் கொல்ல முதலில் துணிந்தாளேனும், தன் பெருமையுடைய மகனும் தானும் இப்பூமியைப் பெறுவதோடு நில்லாமல், கூனியின் வார்த்தையாலே, என் பெருமையுடைய மகனையும் காட்டிற்குப் போகும்படி சொன்னாளே சொன்னாளே என்றான்.]

இன்னபடி இவள் சொன்னதே முடியுமல்லால் நான்முகன் மைந்தனே முயன்றாலும்,

பொன்னார் வலயத் தோளான்
கானே புகுத றவிரா
னென்னா ருயிரோ வகலா
தொழியா திதுகோ சலைகேண்
முன்னா ளொருமா முனிவன்
மொழியுஞ் சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா
மவளுக் கரச னறைவான்.

[பொன்னால் செய்த வலயம்அணிந்த தோள்களைஉடைய இராகவன் காட்டிற்குச் செல்வதையோ தவிர்க்கமாட்டான். என் அருமையான உயிரோ நீங்காது தீராது. (ஏனெனில்) கோசலையே இதனைக்கேள்—முன்காலத்தில் ஒரு சிறந்த முனிவன் இட்டசாபம் ஒன்று இருக்கிறது'' என்று அந்தக் காலத்தில் நேர்ந்ததெல்லாம் அவளுக்கு அரசன் சொல்லானுயினன்]

பண்டைநாள் வேட்டைமேற் சென்று விலங்குகட்குத் துருவும்போது, நீர்முகந்திருந்த முனிமைந்தன் சுரோசனனைக் கரியென மயங்கித் தன் சப்தவேதி அத்திரத்தால் மாய்த்திடலும் அன்னான் அந்தகத் தந்தை சலபோச முனிவன்,

தாவா தொளிருங் குடையாய்
தவறிங் கிதுநின் சரணங்
காவா யென்றா யதனாற்
கடிய சாபங் கருதே
மேவா மகவைப் பிரிந்தின்
றெம்போ லிடருற் றனைநீ
போவா யகல்வா னென்னாப்
பொன்னாட் டிடைபோ யினரால்

[கெடாது விளங்கும் குடையை யுடையவனே, 'தவறிது இழைத்துவிட்டேன், உனக்கடைக்கலம், என்னைக்காக்கக் கடவாய்' என்று நீ வேண்டுதலால், உன்னை எம் கொடிய சாபத் திற் கிலக்காக்க நினைக்கவில்லை. ஏவாமலே எமக்குரிய சேவகனைச் செய்திருந்த புத்திரனை இழந்து இன்று வருந்தும் எங்களைப்போல் நீயும் வருந்தியே விண்ணுலகம் சேருவாய், என்று விதித்துத் தேவலோகம் சேர்ந்தனர்]

எனப் பதினறுசெய்யுள்களால் அச்சிறுசம்பவத்தைத் தயாதனைக்கொண்டு செப்பவைக்கின்றார் கம்பர். இந்நிகழ்ச்சி வான்மீகத்திலும் தயாதனால் கோசலைக்குக் கூறப்பெற்றிருக்கின்றது. இராகவன் வனஞ்சென்ற ஆறாம் நாள் இதனைக் கோசலைக்குக் கூறுவதுடன் தயாதனுடைய உயிரும் அங்குமுடிவுற்றிறுகின்றது. ஆயினும், கூறியகாலத்தைச் சற்று முன்னே இங்குக் கொணர்ந்த இது பெரிய கருமமன்று. மற்று, அந்நிகழ்ச்சியின் காலத்தையே கம்பர் அதிகமும் பின்னுக்குக் கொண்டுபோகின்றார். கோசலையைத் தான் மணப்பதற்கு முன்னரே இத்தவறிழைத்து அச்சாபத்தை எய்தினனென்னத் தயாதன் முதனூலிற் கூறுகின்றான். கம்பரின்படியோ, தயாதன் தேவியர் மூவரையும் மணந்து கணக்கில் பல்லாண்டுகள் மகவின்றி வருந்திய காலத்திற்குப் பின் இப்பிழை அவனால் இழைக்கப் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில் இந்தச் சாபத்தைக் கேட்டபோது,

சிந்தை தளர்வுற் றபர்தல்
சிறிதும் மிலனா யின்சொன்
மைந்த னுளனென் றதனால்
மகிழ்வோ டிவண்வந் தனனால்
அந்த முனிசொற் றமையி
னண்ணல் வனமே குதலும்
என்ற னுயிர்வீ குதலு
மிறையுந் தவறா வென்றான்

[இந்தச் சாபம் என்னைச் சேர்ந்ததே என்று என் மனந் தளர்ந்து வாடுதல் சிறிது மிலனாய், மகனொருவன் எனக்குப் பிறப்பான் என்று ஏற்பட்டதால் அச்சாபத்தையே இனிய சொல்லாகக் கொண்டு மகிழ்ச்சியோடு மீண்டுவந்தேன்— அந்தமுனி அன்றைக்குச் சொன்னதும், இன்றைக்கு இராமன் காட்டிற்குச் செல்வதும், உடனே என் உயிர் போவதும் சிறிதும் தவறமாட்டா - என்று அவ்வரலாற்றைக் கூறி முடித்தான்]

மைந்தன் பிறந்தாற்றானே தான் மாயுங்காலத்தில் அருகிலாதவனாவான் என்ற அவ்வுண்மையைத் தொடர்ந்து இன்புற்றதேயன்றி அந்நாள் தயாதன் மனம் அச்சாபத்திற்குத் தளர்ந்ததில்லையெனின், மகவொன்று தனக்கு வேண்டுமெனும் ஆசை எத்துணைத் தாகமுற் றிருந்திருத்தல் வேண்டுமென்பதை எளிதிலே ஊகித்துக்கொள்ளலாம். சாபத்தால் அவன் சிந்தையின்கண் மகிழ்வே சிறந்தது என்பதைத் தயாதன் வாயினாலேயே கூறவைத்து, இன்று அச்சாபம் நிறைவேறும் நாளில் அவன் உடைந்து அழியும் துயரத்தையும் காட்டுவது இந் நிலையின் துன்ப இயலைத் தோற்றுவித்தற்குரிய கலைத்திறத்தின் சுவை என்னலாம்

இதனிலும் பரிவுடைத்து இதுகேட்டகோசலையின் கதி. இராகவன் வனத்தின்கண் அகலாது நீரான் என்னும் நிச்சயம் அவள்பால் முன்னரே அமைந்ததெனினும், மன்னன் ஒருகால் காலவளவில் இப்பிரிவையும் பொறுத்து உயிர்பிழைக்கும் ஆற்றல் எய்தலாமெனுஞ் சிறு நம்பிக்கையும் இச்சாபவரலாற்றைக் கேட்டவுடன் கல்லின்மேலிட்ட பிளிங்கின்கலமெனப் பிதிர்ந்துபோயதால், "அச் செம்மா மயில் கோசலையுந் திகையா உணர்வு துஞ்சினள்" ஆயினாள்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[430-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

இடவுணர்வு.

கண்ணால் பார்க்கும்போது, ஒருபொருள் வலப்புறம் உள்ளது என்றும், மற்றொரு பொருள் இடப்புறம் உள்ளது என்றும் உணர்கின்றேன். இதை எழுதும்போது ஒரு மாடு முக்காரம் போடுகின்றது; குதிரை கனைக்கிறது. முக்காரம் வடக்கிலிருந்து வருகிறது என்றும், கனைப்புத் தெற்கிலிருந்துவருகின்றது என்றும் உணர்கின்றேன். என் காலின்மேல் எறும்பு ஊர்ந்து செல்கிறது. என் கைமேலே ஓர் ஈ வந்துகுந்துகிறது. நானோ அவற்றைப் பாராமல் இவ்வெழுத்துக்களைப் பார்த்துக்கொண்டே எழுதுகின்றேன். இருந்தாலும், அந்த ஈ வந்து குந்திய இடம் இது; எறும்பு ஊர்ந்த இடம் இது' என யான் உணர்கின்றேன். இவ்வாறு வலம் என்றும், இடம் என்றும், மேல் என்றும், கீழ் என்றும், இடவேறுபாட்டுணர்வு வடிவமாக இடவுணர்வு எழுகின்றது. இடவேறுபாட்டுணர்வே இடவுணர்வின் இன்றியமையாச் சிறப்பாம். கீழ்நிலைகளிலும் இவ் விடவேறுபாட்டுணர்வு விளங்குகிறது.

இவ் விடவுணர்வு உயிர்களுக்கு இன்றியமையாததாகும். இவ் விடவுணர்வு இல்லையானால் உயிர்வாழ்தல் அருமையினும் அருமை, உலகமானது நம்மைப் பலவழியாலும் தாக்குகின்றது. அதற்கு ஏற்ப நாம் மாறி நிற்கின்றோம். உலகத்தின் தாக்கற்கேற்ப நம் செயலை நாம் திருத்தியமைக்காமற் போனால் உயிர் அழிய வேண்டிவரும். "சுட்டதோ கை விட்டதோ" என்ற பழமொழி கையில்வைத்திருந்த சுடுபொருள் ஒன்று நம்மைத் தாக்குவதையும், அதற்குத்தகுந்தபடி, அப்பொருளைக் கைவிடுவதையும் குறிக்கின்றது. அவ்வாறு மாறிநின்று அப்பொருளைக் கீழ்விடாது கையிலேவைத்துக்கொண்டிருந்தால், சூட்டால்கையானது கொப்புளம்கொள்ளும். இவ்வாறு சட்டியைக் கீழ் விடுவதற்கும், சட்டியுள்ள இடநிலையை உணரவேண்டும் அல்லவா? கையில் இருக்கின்றதை நாம் உணராமற் போனால், நாம் எவ்வாறு நம் செயலைத் திருத்தியமைப்பது. வெறிகொண்ட நாய் ஒன்று, வலமாக இருந்து குரைத்துக்கொண்டு ஓடிவருகிறது. வலமாக இருந்து ஓடிவருவதை யுணர்ந்த நான் வேறொரு புறமாக ஓடிப்போகின்றேன்; அவ் விடவுணர்வு எழாமற் போனால், அதன் எதிரில்கூட நான் ஓடுவேன் அன்றோ? எனக்கு முன்னாக மரம் சாய்கிறது; காலைப்பின்னுக்கு வாங்குகிறேன். முன் என்ற இடவுணர்வு இல்லையானால் முன்னுக்குச்சென்று மரத்தின்கீழ் நான் அகப்பட்டு நொறுங்கிப்போவேன் அன்றோ? நம்முடைய மனமானது இவ் விடவுணர்வென்னும் சுக்கானைக் கொண்டுதான், நமது உடலாம் படகை இவ்வுலகமாம் ஆற்றில் ஓட்டிக்கொண்டு போகின்றது.

இவ் விடவுணர்வைப் பல துறையாகப் பலரும் ஆராய்ந்துள்ளார்கள்; பல செய்க்காட்சிகள் செய்தனர். பலநூறு ஏடுகள் எழுதினர். பலரும் பலவழியாக இதனை விளக்கிவைக்கின்றனர். ஆனாலும் பயன் என்? ஒருவரோடு ஒருவர் ஒவ்வாது பலவாறு கூறுவதால், உண்மையை யறிவது அருமையாகின்றது.

இடவுணர்வைப் பற்றிய கொள்கைகளை எல்லாம் தொகுத்துக் கூறுவது அருமையாயினும், அவற்றை இரண்டு பிரிவாகப் பிரித்துவிடலாம். பிறப்பியல் கொள்கையினர் வளர்ச்சிக்கொள்கையினர் என்று முன்னரே பன்முறையும் பாகுபாடு செய்துள்ளோம். இடவுணர்வுக்கு இன்றியமையாதனஎல்லாம் நாம் பிறக்கும்போதே கொண்டுவந்தன அல்ல; மண்மேற் பிறந்தபிறகு பழக்க வழக்கத்தாற் சிறுகச்சிறுக வளர்ந்து முற்றுவனவே அவை எனவிளக்குகின்றனர். வளர்ச்சிக் கொள்கையினர். பிறப்பியல் கொள்கையினரோ, இடவுணர்வுக்கு இன்றியமையாதன அனைத்தும் பிறக்கும்பொழுதே பிறப்பியல்பாகத் தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டிருக்கின்றன என்றும் இவை துய்த்துணர்வால் பின்னர் வளர்கின்றன என்றும் எடுத்துக் காட்டுகின்றனர்.

பலவகையான கொள்கைகளிலும் மூன்று கொள்கைகள் தலைசிறந்து விளங்குகின்றன. பொருள்கள் துய்த்துணர்வால் (Experience) ஒன்றோடொன்று இணைந்து இயைந்து நமது மனத்தில் விழுவதால், பொருள்கள் பல இயைபுபெற்று அறிவை வளர்க்கின்றன என்று கூறும் இணைப்புக் கொள்கையை முன்னரே அறிவோம். இவ்வாறே பலவகைப் புலன்கள் இணைந்தியைவதால் இடவுணர்வும் எழுகின்றதென அவர்கள் மன்றாடுகின்றனர். பரப்புக் கொள்கையினர் எனத்தக்க வேறொரு சாரார், ஒவ்வொரு புலனும் பரப்பு அல்லது பருமை என்ற பண்போடு விளங்குகின்றது எனக் கூறுகின்றனர். மூன்றாவது கொள்கையினர் இடவடிவமாக நினைப்பது மனதின் இயல்பு என்றும், அவ்வாறு அம்மனம் இடவடிவமாக நினைக்குமாறு புலன்கள் தூண்டுகின்றன என்றும் எடுத்துக்காட்டி மனத்தூண்டற் கொள்கையினர் எனப் பேர்பெறுகின்றனர்.

இணைப்புக் கொள்கையின்படி இடவுணர்வு எவ்வாறு எழுகின்றது? பிறக்கும்பொழுது நமது மனம் ஒரு வெள்ளைத்திரைபோல ஓர் எண்ணமும் இன்றி விளங்குகின்றதாம். இந்தத் திரையின்மீது உலகத்துப் பொருள்கள் பலவகைப் புலன்களாகப் பொறிக்கப்படுகின்றனவாம். இப்புலன்களின் இணைப்பே பலவகையான அறிவாக முதிர்கின்றதாம். இவ்வாறுதான் இடவுணர்வும் நமக்கு எழுகின்றதாம். பொருள்களின் நிலையை யுணர்வதும் தொலைவை யுணர்வதும் நமது உடலின் இயக்கத்தோடு தொடர்புண்டு கிடக்கின்றன. ஏதோ ஒரு புறமாகத் தொலைவில் உள்ள பொருளைக் கண்ணால் பார்க்கவேண்டுமானாலோ, கையால் தொடவேண்டுமானாலோ தலையைத் திருப்பி விழியையும் அப் புறமாகத் திருப்புவேன்; அல்லது நடந்து சென்று கையை அப்பொருள்மேல் வைக்கின்றேன். தலையைத்திருப்புதல் விழியைத்திருப்புதல் நடத்தல் தொடுதல் முதலிய செய்கைகள் தசைநாரிலும், மூட்டுவாயிலும், இயக்கப்புலனை எழுப்புகின்றன. அதே நிலையில் உள்ள வேறுபொருள்களைக் காணவோ தொடவோ, வேண்டுமானால் முன் செய்தபடியே பல முறையும் செய்துவரும்போது, காட்சிப்புலனும், அதற்கியைந்த இயக்கப்புலனும் ஒன்றாக இணைந்து இயைந்து விடுகின்றன; அவ்வாறே ஊற்றுப்புலனும் அதற்கியைந்த இயக்கப்புலனும் ஒன்றாக இயைந்து விடுகின்றன. இவ்வாறு கட்புலன் முதலாகிய புலன்களோடு இயக்கப்புலன் இணையும்போது, கட்புலன் முதலியன இடநிலைபெறுகின்றன. இன்ன இடத்தில் அப்பொருள்கள் உள்ளன என்பதைக்காட்டுகின்றன. இயக்கத்தை உணர்த்தும் இயக்கப்புலன் இடநிலையை உணர்த்தும் புலனாக மாறுவது எங்ஙனம்? கல்லும் தண்ணீரும் சேர்ந்தால் மூன்றாவது பொருளாம் காற்றாக மாறிவிடுமா? கட்புலனும் இயக்கப்புலனும் சேர்வதால் மட்டும் மூன்றாவது பொருளாம் இடவுணர்வு எழுவது எங்ஙனம் கூடும். உயிர்க்காலும் (Oxygen) நீர்க்காலும் (Hydrogen) சேர்ந்தபோது நீர் என்றபொருள் வேற்றுருவோடு எழுவதுபோல் கட்புலன் முதலியவும் இயக்கப்புலனும் இணையும்போது இடவுணர்வு எழுகின்றது என்று அக்கொள்கையினர் விளக்குகின்றனர். உலகத்தியற்கையமைப்பு நூல்போல் (Chemistry) மனத்தியற்கை யமைப்புநூல் (Mental Chemistry) எழுதுகின்றனர்.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனாம்! இனாம்!!
போஜன விதி
உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.
இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்வில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
பாலிஸிஹோல்டர் நலமே எங்கள் நோக்கம்.
பிரீமியம் மிகக்குறைவு. ஒருவிதக் குற்றமும் சொல்லமுடியாத செக்கியூரிட்டிகள். கடுமையான சிக்கனம்.
இந்தியரின் திறமுடைய மேற்பார்வை.
பாலிஸிஹோல்டர் பணம் திரும்பப்பெறும் காலம் எளிதில் கணக்குத் தீர்த்துக்கொள்ளும் வசதி.
இந்தியாமுழுதும் கிளை ஆபீஸ்கள்
பொதுஜன ஆதரவும், முன்னேற்றமும் உடையது.
பணத்திற்கு அழிவு ஒன்றும் நேராதபடி லாபமான வழியில் இன்வெஸ்டுமெண்டுகள் செய்யப்படுவது.
எனவே
நாஷனல் இன்ஷியூரென்ஸ் முன்நிற்கின்றது.
பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை:—
கஞ்சம், விசாகபட்டணம், கிழக்கு கோதாவரி, அனந்தபூர், கிழக்கு ஹைதராபாத் ஜில்லாக்கள் கோயமுத்தூர், நீலகிரி. விவரங்களுக்கு எழுதவும்.
113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A.
பிராஞ்ச் செக்ரடரி.

- பாரதி -
சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.
ஓர் தேசிய மாதப் பத்திரிகை.
மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு „	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.
ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.
ஆசிரியர்:—R. நாராயணசாமி.
விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4 சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், முயலுக்கு முயலவேண்டா, நல்லோர்கடன், எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கக் காக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, தல்லாதபேர்களே நல்லவர்கள் 4.வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, உரிமையாற்பெரியாகார், நாணத்தால் வைவார்திறம், மால்வாலியோவின்மரபு மாய்ந்ததில்லையோ, மானமழிந்தபின், மண்சாற்று, பேயச்சில் பிள்ளையாரோ, தலைகீழ்கணக்கு, பள்ளியிற் பழுத்தபழம், கள்வரும் காவலும், பொன்னெழுத்தாம் பொறிக்கலாமோ, அரக்காற்றல், சண்டெலி ஆற்றல், வாலின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தவிரங்கள் இவைதவிரக் கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், மானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்)மொழிபெயர்ப்புக்கட்டுரைகள்,மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட

தோல்பயின்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.
கலாநிலயம்,வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

இரண்டு ஸம்ஸ்கிருத மஹா காவியங்களின் மொழிபெயர்ப்பு.

காதம்பரி

1400-வருஷங்களுக்கு முன் பட்டாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. கதை வெகு அற்புதம். வர்ணனைகள் வெகு சுவை பொருந்தியன. "காதம்பரியைப் படிக்கையில் இரவிகர் உணவையும் விரும்பார்" என்பது வித்வான்களின் பழமொழி. தமிழ் வசன நடை மிக்க இனிது. அநேகம் வித்வான்களும் ஸ்திரிகளும் கொண்டாடுகிறார்கள். விலை ரூ 1-8.

மேகஸந்தேசம்

ஸ்ரீ காளிதாஸ மஹாகவியின் ஸம்ஸ்கிருத காவியத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் அழகிய வசனநடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாபவசத்தால் தன் மனைவியைவிட்டுப் பிரிந்த ஒருயக்ஷன் மனைவிக்குத் தூது அனுப்பும் அருமையான விஷயம்—மனோஹரமானது. முகவுரை முதலியவை வெகு விசேஷமானவை. 0-14-0.

இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூபா **2.** தபால் சார்ஜு பிரத்யேகம்.

வைத்திய கலாநிதி ஆபீஸ், 85, வெள்ளாழத் தெரு, வேப்பேரி, மதராஸ்.

டாக்டர் நஞ்சுண்டராவ் பேதிங் ஆயில்.

இந்த எண்ணையை ஸ்நானத்திற்கு உபயோகித்து வந்தால் மூளைக்குக் குளிர்ச்சியையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் ஞாபக சக்தியையும் பெருக்கும். சில கண் சம்பந்தமான வியாதிகளையும் நீக்கிவிடும்.

அல்லது ஸ்நானத் தைலம்

விலை ரூபா **1.** எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். பார்மசி, திருவல்லிக்கேணி, மதராஸ்.

கலாநிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பாலகாண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—0—0,** வெளிநாடு ரூ. **11—8—0.**

(தபால் சார்ஜ் உள்பட.)

விலாசம்:—

கலாநிலயம், புரசைபாக்கம், சென்னை.

வர்த்தமானம்

தேசீய முயற்சி:—இந்தியாவில் கையிருப்பிலுள்ள அந்நியத்துணியை எல்லாம் செலவழித்துவிடத் திட்ட மொன்றை, அவற்றை ஏற்றுமதி செய்வதற்காக ஏற்பட்டுள்ள புதிய கம்பெனியின் டைரெக்டர்கள் காந்திஜியைக் கலந்து தயாரித்துவிட்டார்கள். முதலில் பம்பாய், கல்கத்தா, சென்னை, காராச்சி ஆகிய நாலு துறைமுகங்களிலுமுள்ள அந்நியத்துணிகள் வெளியேற்றப்படும். அவற்றை விற்பனை செய்வதற்கான இடங்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதல் பிரிவில் ஆப்கனிஸ்தானம், பாரசீகம், மெக்கா, மதீனா, துருக்கி, கிழக்காப்பிரிக்கா, தென்னாப்பிரிக்கா, ஆகிய தேசங்களிருக்கின்றன. 2-வது பகுதியில் சிங்கப்பூர், இந்தோ சைனா, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளும் பசிபிக் மகாசமுத்திரத்தை அடுத்த இதர தேசங்களும் இருக்கின்றன. தேசாபிமானம் மிகுந்த அந்நியத்துணி வியாபாரிகள் பலர் அந்நியத்துணியை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பதால் உண்டாகும் நஷ்டத்தைத் தாங்களே ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும்கம்பெனிக்கு அந்த நஷ்டத்தின் பாரத்தை அளிக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

காலஞ்சென்ற பி. எப். மதனின் உறவினரான ஸ்ரீமான் எஸ். எப். மதனை இக்கம்பெனியின் காரியதரிசியாக இருக்கும்படி டைரெக்டர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவர் ஜவுளி வியாபாரத்தில் மிகுந்த அநுபவமுடையவர். கம்பெனியின் ஆபீஸ் பம்பாய்க் கோட்டை புளியமரத்தெரு 'ஈவர்ட் ஹவுஸ்' என்ற கட்டடத்தில் இருக்கிறது.

***

உலக மகாநாட்டார் நவீன வியாபாரப்போக்கிற்குத் தக்கபடி ஒரு புதிய வருஷ, மாத, வார ஏற்பாடு செய்து வருகின்றனர். இந்த முறை எல்லாத் தேசங்களிலும் ஒரே மாதிரியா யிருக்க வேண்டு மென்று முயற்சி நடந்து வருகிறது. சமீபத்தில் இது விஷயமாகக் கலந்து யோசிக்கும் பொருட்டு சர்வ தேச சங்க மெம்பர்களின் நிபுணர்களின் கூட்ட மொன்று ஜினீவாவில் கூடும். இப் புதிய முறையைப் பற்றி 1934-ம் வருஷம் ஜனவரி மாதத்துக்குள் எல்லா நாடுகளின் பார்லிமெண்டுகளும் சம்மதத்தைத் தெரிவிக்கப் போதிய சாவகாச மிருப்பதாக மேற்படி கமிட்டி கூறுகிறது.

இப்புதிய திட்டப்படி ஒவ்வொரு மாதமும் 28 நாட்களடங்கியதாகும். வருஷத்துக்கு 13 மாதங்களுண்டு. மிகுதியான மாதத்தின்பெயர் "சால்" என்று வைக்கப்படலாமென்றும், அதனை ஜூன் ஜூலை மாதங்களுக்கு இடையில் வைக்கலாமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

1934-ம் வருஷத்துக்குப் பிறகு தேதியினால் கிழமையையும் கிழமையினால் தேதியையும் எளிதில் கண்டுபிடித்துவிட முடியும். மதசம்பந்தமான திருநாட்கள் குறிப்பிட்ட தேதிகளில் நடைபெறும். உதாரணமாக ஈஸ்டர்தினம் ஏப்ரல் 15-ந் தேதி ஞாயிற்றுக் கிழமையிலும், கிறிஸ்துமஸ் பண்டிகை டிசம்பர் 23ந் தேதியான திங்கட்கிழமையிலும் வரும். பிராட்டஸ்டன்டு சர்ச்சுகளும், கிரீஸ் தேச மாதா கோயில்களும் கிறிஸ்து மதத் திருநாட்களைத் தீர்மானிப்பதில் ஆதரவு காட்டியிருக்கின்றனர். ரோமிலுள்ள சர்ச் அதிகாரிகளும் அவ்விதமே ஆதரிப்பார்களென்று நம்பப்படுகிறது.

புதிய வருஷத்தில் எல்லாத் தேசங்களுக்கும இரண்டு விடுமுறை நாட்களுண்டு. ஒவ்வொரு வருஷத்திலும் 365-வது நாள் டிசம்பருடன் சேர்க்கப்படமாட்டாது. அதற்கு "வருஷ தினம்" என்று பெயரிட்டு அன்று உலக முழுவதும் விடுமுறை நாளாகக் கொண்டாடப்படும். இதே மாதிரி, லீப் வருஷங்களில் ஜூன் மாதக் கடைசியில் ஒரு விடுமுறை உண்டு. அதற்குத் தேதி கிடையாது. அந்தத் தினத்துக்கு "லீப் நாள்" என்று பெயர். எல்லாத் தேசங்களிலுமுள்ள பிரபல வியாபாரிகள் பலர் இத்திட்டத்திற்கு ஆதரவளித்திருக்கின்றனர்.

***

வட இந்தியாவிலுள்ள கவிராஜப்பூரில் செல்வ சம்பத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு தனவந்தரிடம் 300 பேர் கொண்ட ஒரு கூட்டத்தினர் போய் நாங்கள் பசியால் வந்திருக்கிறோம். எங்களுக்கு அரிசி கொடுங்கள் என்றும், நல்லமனதுடன் கொடுக்காவிட்டால்பகிரங்கமாய் கொள்ளையிட்டுக்கொண்டுபோவோமென்றும்கேட்டனராம். இதைச் செவியுற்றதனவந்தர் வியப்படைந்து தம்மிடம் 700 அந்தர் அரிசி யிருக்கிற தென்றும் தேவையானதை எடுத்துச் செல்லுங்களென்றும் கூறினர். இதைக்கேட்ட யாசகர்கள் 100 அந்தரைத் தனவந்தர் உபயோகத்துக்கு விட்டு 600 அந்தரை 300 யாசகர்களும் பங்கிட்டுக்கொண்டு இதை உம்மிடம் கடனாகக்கொண்டு செல்கிறோம். வருகிற வருஷம் கொடுத்து விடுகிறோமெனப் பத்திரமும் எழுதிக் கொடுத்துவிட்டுப் போயினர். தனவந்தர் உதாரத்தோடு கொடுத்தது அவருக்குப்பெரும் மகிமையும் ஏழைகளுக்குப் பெரும் பிரயோஜனமுமாயிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
நேத்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

பம்பாய், கல்கத்தா.

NANJANGUD TOOTH POWDER

மதுரை
காஞ்சீபுரம்.

88922

KALANILAYAM. REG. NO. M. 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணு 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—: வைத்திய ரத்ன :—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன பண்டிட்

டாக்டர் N. V. ஸ்ரீராமாசார்லு

அவர்களின்

'மஹா சந்தனாதித் தைலம்'

(ரிஜிஸ்டர்ட்)

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபகசக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 5.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட், சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A., B.L.

தபால் பெட்டி 151, சென்னை.
தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

கேட்லாக் இனம்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணு 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்கு மோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணு 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)